மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 9

அக்டோபர் 2017







## அனைவரையும் அரவணைத்திடும் அன்பு சமூகம் உருவாக்கிடுவோம்











நன்கொடை ₹20/- தனிச்சுற்றுக்கு மட்டும்

கனவு
இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான
அக்டோபர் 2017 இதழ் 9

விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக வெளியிடுபவர்
**தே. சைலட் மோனி**
27, வெயர்லெஸ் ரோடு,
குறிஞ்சி நகர் மேற்கு, கே.கே. நகர்,
திருச்சி - 620 021, தமிழ்நாடு

விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக அச்சிடுபவர்
செந்தில் பேப்பர் மார்ட், கடலூர்
வரைகலை
மேரிபா ஸ்கிரீன்ஸ், கடலூர்

தலைமை ஆலோசகர்
**கிரேக் பியூ**

தலைமை ஆசிரியர்
**தே. சைலட் மோனி**
ஆசிரியர்கள்
**S. சுபா**
**K. சுரேஷ் கண்ணா**
**C. ராஜாமணி**

சந்தா, விளம்பரம், படைப்புகள் மற்றும்
வாசகர்களின் கேள்விகளுக்கு
**089400 51900**
என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்


உள்ளே...


3 என் பேனாவிலிருந்து...
5 சமூக அழுத்தங்களை கையாளுதல்
8 புறக்கணிப்புள்ளானவர்களை உள்வாங்குதல்
10 கிராமம் - நமது அன்பு சமூகம்
14 இரட்டைமலை சீனிவாசன்
16 சாதிப்போம்
17 மதக்கலவரமுன்னா என்ன?
18 தற்கொலை தீர்வல்ல - கோழைத்தனம்
22 முத்துலட்சுமி ரெட்டி
25
27 ஹென்றி டியூனண்ட்
30 விரலுக்கு ஏத்த வீக்கம்


# தடைகளை உடல் ஊனங்களை தகர்த்தெறிந்தவர்கள்



## ஹெலன் கெல்லர் (Helen Keller)

*1880-ம் ஆண்டு ஜூன் 27-ம் தேதி அமெரிக்காவின் அலபாமா நகரத்தில் ஹெலன் கெல்லர் பிறந்தார். அவர் 19 மாதக் குழந்தையாக இருக்கும்போது மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார் (மூளைக்காய்ச்சல்!). அதனால் அவர் தன் பார்வையையும் கேட்கும் திறனையும் இழந்தார்.*

*7 வருடங்களுக்குப் பிறகு ஹெலன் டீச்சர்* Anne Sullivan *உதவியுடன் விரல்களால் - அதன் அசைவுகளால் கற்க ஆரம்பித்தார். 1888-ல் பார்வையற்றோருக்கான பள்ளிக் கூடத்தில் சேர்ந்தார். புதிய உறவுகள் கிடைக்கப்பெற்றன.*

*ஹெலன் கெல்லர் தைரியத்தின் அடையாளமாக விளங்கினார். மிகச் சிறந்த அறிவாளி, மிகத் தெளிந்த குறிக்கோள் உடையவராக இருந்தார். அடுத்தவர்களுக்கு உதவுவதில் அவரின் வாழ்க்கை கழிந்தது.*

### சாதனைகள்

1. 1904-ம் ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு முடித்த முதல் பார்வையற்ற பெண்மணி.
2. 1903-ம் ஆண்டு மிகவும் பிரசித்தி பெற்ற தன்னுடைய சுயசரிதையை "என் வாழ்வின் கதை" "The story of My Life" எழுதினார். இது திரைப்படமாகவும் நாடகங்களாகவும் வெளியாகியுள்ளது.
3. தன் வாழ்நாளில் 12 புத்தகங்களை எழுதியுள்ளார். பத்திரிக்கைகளுக்கு தொடர்ந்து எழுதினார்.
4. பார்வையற்ற நிலைமையையும், ஊட்டச் சத்தின்மையும் குறைத்திட 1915-ம் ஆண்டு "Helen Keller International" அமைப்பை ஆரம்பித்தார்.
5. மிகவும் புகழ்பெற்ற அரசியல், சமூக ஈடுபாட்டாளராக விளங்கினார். பெண்கள் உரிமைகள், கருத்தடை உரிமைகளுக்காக குரல் கொடுத்தார்.
6. உலகப் பிரசித்தி பெற்ற பேச்சாளராக விளங்கினார்.
7. பார்வையற்றோருக்காக அமெரிக்க அமைப்பின் முன்னோடி உறுப்பினராக திகழ்ந்தார்.
8. 1964-ம் ஆண்டு ஜனாதிபதியின் சுதந்திரப் பதக்கம் இவருக்கு வழங்கப்பட்டது.
9. 20-ம் நூற்றாண்டின் உலகிலேயே மிகவும் பிரசித்திபெற்ற நபர்களில் ஒருவராக விளங்கினார்.
10. கோடானகோடி நபர்களின் அகத்தூண்டுதலாக விளங்கினார்.

> “ ஒவ்வொரு
> நபரும்
> உள்வாங்கப்படும்
> போதுதான்
> மனித குடும்பம்
> பூர்த்தியடைகின்றது ”
>
> **- Curt Amstrong -**

# என் பேனாவிலிருந்து...

மதிப்பிற்குரிய நண்பர்களே!

நம்முடைய வாழ்வில் எதாவது ஒரு காலக்கட்டத்தில் நாம் பிறரால் ஒதுக்கப்படுவதை உணர்கின்றோம் அல்லது ஒரு நிகழ்வில் நாம் பங்கேற்றிட இயலாது எனக் கூறப்படுகின்றோம். பிறருடன் தொடர்புகள் உருவாக்குவது மனித இயல்பு. ஆனால் சில நேரங்களில் மனிதர்கள் தங்களுடைய நட்பு வட்டத்திற்குள் அல்லது குழுவில் பிறர் இணைவதை அனுமதிப்பதில்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். குறிப்பாக பயம். நாம் பிறரால் ஒதுக்கப்பட்டு விடுவோமோ என்கின்ற பயம்; அல்லது பிறரைவிட தான் எப்போதும் முக்கியமானவராகக் கருதப்பட வேண்டும் என்கின்ற எண்ணம்; அல்லது தான் தான் அனைத்தையும் கட்டுப்படுத்த வேண்டும் என்கின்ற ஆவல்.

ஆனால், உண்மையில் நாம் இணைந்திருப்பது தான் வலிமை. நாம் பிறரை மரியாதையுடனும் மாண்புடனும் நடத்தும்போது, பிறரும் அவ்வாறே நம்மை நடத்துகின்றனர். ஒவ்வொருவரையும் அரவணைத்து, வேற்றுமையில் ஒற்றுமை காணும் சமூகமாக நாம் வாழும்போது அனைவரும் பயன் பெறுகின்றனர்.

ஒரு பழைய கூற்று சொல்கிறது ‘‘ஒரு சங்கிலியின் வலிமை அச்சங்கிலியில் உள்ள எல்லா கண்ணி களுக்கும் பொருந்தும்’’.

நம்முடைய சமூகத்தில் அங்கமாகக் கருதப்படாமல் ஒதுக்கி வைக்கப்படுகின்றவர்களை நாடிச்செல்வது ஒரு தலைவரின் கடமையாக உள்ளது.

ஒரு நிகழ்விலிருந்து அல்லது ஒரு குழுவிலிருந்து அல்லது ஒரு குடும்பத்திலிருந்து அல்லது ஒரு சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுதல் பல வகைப்படும்.

- வலிமையில்லையென்று விளையாட்டுக் குழுவில் சேர்க்காத நிலை
- துணி அழுக்கா இருக்கிறது என்பதற்காக ஒதுக்குவது
- சக்கர நாற்காலியில் இருக்கும் மாற்றுத் திறனாளிகளை குழுக்களில் ஏற்காதது
- நமது ஊரில், தெருக்களில் பிச்சை எடுப்பவர்களை ஒதுக்குதல்

இதுபோல் இச்சூகம் பல்வேறு நபர்களை பல்வேறு காரணங்களக்காக ஒதுக்கி வைக்கின்றது. ஆனால் நாம் மாறுபட்டவர்களாக, வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டும். தலைவர்கள், சமூகத்தை வழி நடத்துபவர்களாக, ஒவ்வொருவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும்.





தாங்க முடியாத அளவுக்கு நமக்கு ஒருபோதும் துன்பங்கள் ஏற்படுவதில்லை

என் வாழ்விலிருந்து ஒரு உதாரணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 2008-ம் வருடம் வேலையின் காரணமாக நான் எத்தியோப்பியா சென்றேன். என்னுடைய பணியானது மருத்துவமனைகளை மதிப்பீடு செய்வது. ஒருநாள் நான்வெளியே நடந்து செல்லும்போது 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மண் சுவராலும், தகடாலும் வேயப்பட்ட கட்டடத்திலிருப்பதைப் பார்த்தேன். அங்கிருந்த நபர்களிடம் அந்தக்கட்டிடம் என்ன என்று கேட்டபோது, முட்டாள் பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடம் என்று கூறினார்கள். முகத்தையும் கைகளையும் கோரமாக வைத்துக்கொண்டு அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களின் நலனை விளக்க முற்பட்டார்கள்.



நான் என்ன கட்டிடம் என்று பார்க்கப்போனேன். என்னைப் பார்த்ததும் மாணவர்கள் அனைவரும் உள்ளே சென்று விட்டனர். அவர்களில் 15 பேர் வாய் பேசாதவர்கள். செய்கைகளால் பிறரிடம் பேசினார்கள். எனக்கு ஒன்று புரிந்தது. இந்த மாணவர்கள் ஒதுக்கப் படுகின்றார்கள். ஆனால் அவர்கள் மிகவும் திறமையானவர்கள், பிறரைப்போல ஆர்வமும் உற்சாகமும் உடையவர்கள். அவர்களும் முக்கியமானவர்கள், மதிப்பிற்குரியவர்கள். இந்த மாணவர்களும் பிறரைப் போல நடத்தப்பட வேண்டியவர்கள்.

அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும். அனைவரும் இணைந்த சமூகத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். நமக்குத் தெரியாது - நாம் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் ஒதுக்கப்படலாம்.

தலைவர்களாக, தலைமைப் பண்பு உடையவர்களாக இருக்கும் நாம் பள்ளிக் கூடங்களில், கல்லூரிகளில், நாம் வாழும் கிராமத்தில் யாரையும் உடல்குறைபாட்டிற்காக, வறுமையின் நிமித்தமாக, பிற சாதியென்பதற்காக, மூன்றாம் பாலினத்தவர் என்பதற்காக ஒதுக்கிவிடக் கூடாது. பிறரை ஒதுக்கி வைத்து, ஒரு சமூகம் வளர்ச்சி காண முடியாது.

ஒரு சமூகத்தில் உள்ள அனைவரும் சம உரிமைகளுடனும், சம பங்கேற்புடனும், சம மதிப்புடனும் வாழ்வதுதான் வாழ்க்கை. அத்தகைய சமூகம் தான் வளர்ந்த சமூகமாகக் கருதப்பட முடியும்.


**நான் இணைந்து**
**அனைவரையும் உள்ளடக்கிய**
**சமூகங்கள் உருவாக்குவோம்!**


**வாருங்கள் இளையோரே!!**

உங்கள் உண்மையுள்ள,

கிரேக் பியூ

விஷன் செயல் இயக்குநர்




அன்புதான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலி நீ தான்
- அன்னை தெரசா -




கிரேக் பியூ (Greg Buie)

தமிழில்: தே. சைலட் மோனி


புதிதாக சிந்திப்பவர்கள்
வித்தியாசமாக சிந்திப்பவர்கள்
ஆக்கப்பூர்வமாக சிந்திப்பவர்கள்

} சமூக அழுத்தங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் வல்லமை பெற்றிருப்பார்கள்

நாம் சரியென்றோ, அல்லது தவறென்றோ ஏற்றுக் கொண்டிருக்கும் பல்வேறு விஷயங்களை கேள்வி கேட்பவர்களாக இருப்பார்கள்

- ஜான் டபிள்யூ. கார்டினர்

# சமூக அழுத்தங்களை கையாளுதல்

## Handling Social Pressure

வேறு எந்தக் காலக் கட்டத்திலும் இல்லாத அளவிற்கு சமூக அழுத்தங்கள் பல வடிவங்களில் சிறுவர்களில் இருந்து பெரியவர்கள் வரை பாதிப்புகளை உருவாக்குகின்றது. மன உளைச்சல்களுக்கும், மன அழுத்தங்களுக்கும் உள்ளாகி விபரீதமான முடிவுகளை எடுக்கின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டு வருகின்றது.

இக்கட்டுரை சமூக அழுத்தங்களைப் பற்றிய ஆழமான கண்ணோட்டத்தை நமக்குக் கொடுப்பதுடன் தீர்வுக்கான வழிமுறைகளைப் பற்றியும் அலசுகின்றது.

### சமூக அழுத்தம் என்றால் என்ன?



- சமூகம் (குடும்பம், பெற்றோர்கள், பள்ளிக்கூடம், ஆசிரியர்கள், பெரியோர்கள், நண்பர்கள், கிராமம், நகரம்...) நம் மீது திணிக்கும் அல்லது நம்மைக் கட்டுப்படுத்தும் சக்திகள்/காரணிகள்.
- நம்முடைய நம்பிக்கைகளின் மீது, செயல்பாடுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் எதுவும் சமூக அழுத்தம்.
- சமூக அழுத்தங்களே நம்முடைய நடவடிக்கைகளை, சிந்தனைகளை செதுக்குகின்றது அல்லது வரையறுக்கின்றது

இவைகள் நம்மீது நேர்மறையான அல்லது எதிர்மறையான தாக்கங்களை உருவாக்குகின்றது. சமூக அழுத்தங்களினால் நாம் சமூகத்தின் விருப்பத்திற்கேற்ப வாழ விளைகின்றோம்.

### சமூக அழுத்தம் உருவாகும் இடங்கள்

#### நண்பர்கள்




- இவர்கள் நம்முடைய வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கங்களை உருவாக்கு கின்றார்கள்.
- உன் நண்பன் (நண்பர்கள்) சொல்வதை நம்புகின்றாய். அவர்கள் சொல்வதின் படி நடக்கின்றாய்.
- இளையோர்கள் தாங்கள் நம்பும், விரும்பும் நண்பர்களின் வார்த்தைகளை, செயல்களை, நம்பிக்கைகளை அப்படியே (Copy) செய்கின்றார்கள்.
- பல தருணங்களில் நண்பர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக நம்முடைய விருப்பதிற்கு மாறாகக் கூட, பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகின்றோம்.

**உன்னையே கேட்டுப்பார்**


நண்பர்களின் விருப்பப்படி, கட்டளைகளின்படி நடக்கின்றோமா? அல்லது நாமாக சிந்தித்து முடிவெடுக்கின்றோமா?


#### குடும்பம்

- மிகப்பெரிய அளவில் அழுத்தங்கள் நம்முடைய குடும்பங்களிலிருந்து வருகின்றது.
- நம்முடைய பெற்றோர் நினைப்பது போல, ஆசைப்படுவது போல நாம்செயல்பட வேண்டும்.



குறை சொல்பவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். ஏனென்றால் உங்களை நீங்களே செதுக்கிக் கொள்வதற்கு அவர்கள்தான் உயிர் கொடுக்கின்றனர்





- நம்முடைய குடும்பங்கள் ஏற்றுக் கொள்ளாத சிந்தனைகளை, நபர்களை, திட்டங்களை, ஆலோசனைகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.
- நம்முடைய குடும்பம் நினைப்பதிலிருந்து மாறுபட்டு நின்றால் நீ தறுதலையென ஒதுக்கப்படலாம்.

**உனக்காக**

குடும்பத்தினரிடம் கடமையுணர்வோடு இருக்க வேண்டும். அதேநேரத்தில் நாம் நமக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்க வேண்டும்.

## சமுதாயம்

have to be skinner
have to be prettier
have to be smarter

- நாம் வாழும் இடத்தில் உள்ளவர்கள் நம்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றார்கள்.
- நாம் சார்ந்துள்ள மதத்தின் தலைவர்கள் நம்மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.
- நம்முடைய உலகப் பார்வையையும், நாம் வாழ நினைக்கின்ற வாழ்க்கையையும் மதங்களும் சாதிகளும் தீர்மானிக்கின்றன.

## வர்க்கம்

### ஏழை, பணக்காரன் பாகுபாடு



- நம்முடைய சமூக நிலை மற்றும் பொருளாதார நிலை நம்முடைய சிந்தனைகளை ஆக்கிரமிக்கின்றது.
- பணம் – வாய்ப்புகளை உருவாக்கும் – ஆனால் நம்முடைய அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வாகாது.
- நம்முடைய பொருளாதார நிலைக்கு ஒத்தவர்களுடன் நாம் உறவு கொள்கின்றோம்.
- நாம் சார்ந்துள்ள குழுக்கள், பிற குழுக்களைப் பற்றிய எண்ணங்களையும், மனப்பாங்குகளையும் கொண்டுள்ளன. அது சரியானதாகவோ அல்லது தவறானதாகவோ இருக்க முடியும்.
- ஏற்றத் தாழ்வான நம்முடைய சமூகத்தில் நாமிருக்கும் நிலையிலிருந்து முன்னேறும் போது எதிர்ப்புகள் உருவாகின்றன.
- வர்க்கம் – நம் முன்னேற்றத்திற்கு, உறவுகளுக்கு தடையாக இருக்க முடியும். அதே நேரத்தில் பணம் / செல்வம் மற்றும் சமூக இயக்கமும் (Social Mobility) வாய்ப்புகளை உருவாக்கித் தர இயலும்.

## நல்ல பெயரும் சாயம் பூசப்படுதலும்

- இச்சமுதாயம் நம்மை நல்லவனென்றோ தீயவனென்றோ மிகவும் எளிதாக நம்முடைய சில அடிப்படை செயல்பாடுகளை கணித்து, சாயம் பூசிவிடும். கெட்டவன் சாயம் பூசப்பட்டால் அது மாறுவதற்கு காலம் எடுக்கும்.
- இச்சமுதாயம் நம்மை நடத்தும் விதங்களும் மாறுபடும்.
- நம்மை நல்லவன் என்று இச்சமுதாயம் பச்சைக் குத்தும்போது, நம்மை அறியாமலேயே இந்த நல்லப்பெயர் நிலைத்திட வேண்டுமென்பதற்காக – சமூகத்திற்கு கட்டுப்பட்டவர்களாகவே வாழ்ந்து இறந்து விடுகின்றோம்.

**உன்னிடம்**

உனக்குப் பிடித்ததை,
சிறந்தது என நீ நினைப்பதை
செய்வது சிறப்பா...?
பிறரின் எண்ணப்படி,
கட்டளைகளின்படி,
விருப்பங்களின்படி
நடப்பது சிறப்பா...?



## சமூக அழுத்தங்களை கையாள்வது எப்படி?





- சமூக அழுத்தங்களை கையாள்வதற்கு இதுதான் வழியென்று – ஒரு வழியினை வரையறுத்துக் கூறிட முடியாது.
- ஒவ்வொரு சமூக சூழலையும் கவனமாக சிந்தித்து ஆராய வேண்டும்.
- சமூக அழுத்தங்களையும், அது நம்மில் ஏற்படுத்தும் மாற்றங்களையும் அறிந்திருந்தால் – நாம் சிந்திக்கும் விதம், செயல்படும்விதம் வித்தியாசமானதாக இருக்கும்.
- கேள்விகள் கேளுங்கள், ஆழமாக சிந்தியுங்கள். அடுத்தவர்களின் எண்ணங்களின் கோணங்களை அலசுங்கள்.
- சமூக அழுத்தங்களை வெற்றிகரமாக முறியடிக்க – நிமிர்ந்து நிற்க தெரிய வேண்டும், மன தைரியம் வேண்டும். – இதயம் அலசி, ஆராய்ந்து நல்லது என சொல்வதை செய்ய வேண்டும்.



**சிந்திக்க**
**சில நொடிகள்**

*நீ வாழும் சமூகத்தில் உன் வாழ்வில் தாக்கம்/பாதிப்பு ஏற்படுத்தும் காரணிகள் என்ன? அவைகள் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது?*






உன்னை சென்னையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிக்கு தேர்ந்தெடுத்து உள்ளார்கள். உன்னுடைய பெற்றோர் நீ – பெண் என்பதால் தங்களுடைய சம்மதத்தை தரவில்லை. அவர்கள் கூறும் காரணங்கள்: பாதுகாப்பின்மை, படிக்க வேண்டும். ஊர் தவறாகப் பேசும்.

***இச்சூழலில் நீ என்ன செய்வாய்?***




நீ உயரமாக இருக்கின்றாய். நன்றாக Basket Ball விளையாடுவாய். நீ தொடர்ந்து Basket Ball Team-ல் இருக்க வேண்டும் என விரும்புகின்றாய். ஆனால் பள்ளிக்கூட நிர்வாகமோ நீ கபடி விளையாட வேண்டும் என விரும்புகின்றது.

***நீ இச்சூழலில் என்ன செய்வாய்?***




உனக்கு வயது 18. முதன்முறையாக ஓட்டுப்போட போகின்றாய். சமூக அக்கறை கொண்டுள்ள ஒரு நபருக்கு வாக்களிக்க விரும்புகின்றாய். ஆனால் உன் பெற்றோரும், உன் உறவினர்களும் குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவருக்கு வாக்களிக்க சொல்கின்றார்கள்.

***இச்சூழலில் என்ன செய்வாய் நீ?***


வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் – சமூக அழுத்தங்கள் இருந்து கொண்டே இருக்கும். சமூக அழுத்தங்களிலிருந்து விடுபட்டு சுயமாக சிந்திப்பவர்கள் வெற்றி பெறுகின்றார்கள். மனமகிழ்வுடன் வாழ்கின்றார்கள், சாதிக்கின்றார்கள். சமூகத்தில் மாற்றங்களை கொண்டு வருகின்றார்கள்.

## சமூக கட்டுப்பாடுகளை / நியதிகளை உடைத்தெறிதல்




- சமூக கட்டுப்பாடுகளை உடைத்தெறிவது என்பது பல நாடுகளில் / சமூகங்களில் சாத்தியமில்லை.
- ஏனெனில், இவைகள் நாம் விரும்புகின்றோமோ / இல்லையோ நம்மீது திணிக்கப்பட்டுள்ளன.
- சமூகத் தலைவர்கள், நாட்டுத் தலைவர்கள் எடுக்கின்ற முடிவுகளின்படி நாம் நடக்க வேண்டும் என நினைக்கின்றனர்.
- இவைகள் நல்ல முடிவுகளாகவும் இருக்கலாம், மோசமானவைகளாகவும் இருக்கலாம்.
- சமூக கட்டுப்பாடுகளை உடைத்தெறிவது என்பது பல சூழல்களில் சாத்தியமில்லை.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமூக நியதிகளாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். சாதக – பாதகங்களை அறிவியல் பார்வையுடன் அலச வேண்டும். பிறகு முடிவெடுக்க வேண்டும்.





மாற்றிட




வற்புறுத்தும்போது, நீ சிந்தித்து உனக்குச் சரியெனப்படுவதை முடிவெடுத்து செயல்படுத்து.


- அடுத்தவர்களுக்காக வாழப்போகிறாயா? உனக்காக வாழப்போகிறாயா?
- உன் முடிவுகள் பிறருக்கு ஏமாற்றம் அளிக்கலாம், வேதனை அளிக்கலாம்.
- உன் வாழ்க்கையை உன் மதிப்பீடுகளின்படி, எண்ணங்களின்படி வடிவமைத்திட உனக்கு உரிமையுண்டு.
- அடுத்தவர் சுட்டிக்காட்டி, கட்டாயப்படுத்திய வாழ்க்கைப் பாதையை தேர்ந்தெடுக்கும்போது ஏமாற்றங்களும் நிறைவற்ற தன்மையுமே ஏற்படும்.
- தனிப்பட்ட மாற்றங்களும், சமூக மாற்றங்களும் கேள்விகள் கேட்கும்போதுதான் பிறக்கும்.

| | | |
|---|---|---|
| சமூக அழுத்தங்கள் உன்னை அமுக்கி விடாமல் கவனமாய் இரு! | உன் சொல்லாலும் செயலாலும் பிறருக்கு எந்த அழுத்தங்களையும் கொடுக்காதே! | வாழ்ந்து பார்ப்போம் வா தோழா! வா தோழி! |






உன் முதுகுக்குப் பின்னால் பேசுபவர்களைப் பற்றி கவலைப்படாதே... நீ அவர்களுக்கு இரண்டு அடி முன்னால் இருக்கிறாய் என்று பெருமைப்படு...





முனைவர்.
க. பழனித்துரை




# புறக்கணிப்புக்குள்ளானவர்களை உள்வாங்குதல்

சமீப காலமாக வருகின்ற பன்னாட்டு அறிக்கைகள் அது சுற்றுச்சூழல் பற்றியதாக இருந்தாலும் சரி, பருவநிலை மாற்றமாக இருந்தாலும் சரி, பல்லுயிர் பெருக்கமாக இருந்தாலும் சரி, பெருகி வருகின்ற மக்கள்தொகையாக இருந்தாலும் சரி, அனைத்தும் சொல்லுகின்ற செய்தி நாம் நிச்சயமற்ற நிலையை நோக்கி நகர்கின்றோம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அது மட்டுமல்ல நாம் நம் எதிர்கால சந்ததியினரின் வாழ்வை சீர்குலைத்தவிடப் போகிறோமா என்ற ஐயத்தை உருவாக்குகின்றது இந்த அறிக்கைகள். நம் ஆளுகை, நிர்வாகம், அரசியல் என்பது எதிர்காலம் பற்றி சிந்தித்து செயல்படுவதாக நமக்குப் புலப்படவில்லை. நம்மை ஆளுகின்ற வர்க்கம், நம் அரசியல் கட்சிகள் இந்த அறிக்கைகளின் சாரங்களை புரிந்து கொண்டதாக நமக்கு விளங்கவில்லை. இந்த அறிக்கைகளின் முக்கியத்துவம் பற்றி பொதுவெளியில் எந்த விவாதமும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. நம் அரசியல் கட்சிகள் கொஞ்சமும் இந்தச் சூழல் பற்றி புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை.

நம் நாட்டில் நடைபெறும் அரசியல், ஆளுகை, நிர்வாகம் இவை அனைத்தும் முன்னேற்றம், மேம்பாடு அதுவும் அனைவருக்குமான முன்னேற்றம், அனைவருக்குமான மேம்பாடாக இருப்பதற்குப் பதிலாக, இவைகள் அனைத்தும் கட்சி அரசியலுக்குள் சிக்கிக்கொண்டுள்ளன. அரசியல் கட்சியைத் தாண்டி ஒரு அரசியல் இருக்கிறது. அதுதான் மேம்பாட்டு அரசியல் அல்லது வளர்ச்சி அரசியல். கட்சி அரசியலைத் தாண்டி மக்கள் அரசியல் என்ற ஒன்று இருக்கிறது.


எனவே புதிய திசை நோக்கி நம் அரசியல், ஆளுகை, நிர்வாகம் பயணிக்க வேண்டும். ஆனால் இன்று நம் அரசியல் ஓர் உணர்வற்ற நிலைக்கு வந்து விட்டதாகவே கருத வேண்டியுள்ளது. இந்த முடிவுக்கு நாம் ஏன் வருகிறோம் என்றால் சமீபத்தில் நம்மை பயத்தில் ஆழ்த்தக்கூடிய அறிக்கை ஒன்று வெளியானது. அந்த அறிக்கை அறிவுத் தளத்தில் மட்டுமே விவாதிக்கப்படுகிறது. அதுதான் உலக ஏற்றத் தாழ்வு பற்றிய அறிக்கை. ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் என்பது உலகத்திலேயே மிக அதிகமாக இருப்பதில் நம் நாடு முதல் நிலையில் இருக்கின்றது. இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் பல ஏழை நாடுகளில்கூட கிடையாது. அதேபோல் பல பணக்கார நாடுகளிலும் இல்லை. இது ஒரு அபாயகரமான சூழல் என்பதை அந்த அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது.



இந்த ஏற்றத்தாழ்வுகள் 1993-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் மிக வேகமாக அதிகரித்துள்ளது. இந்த அறிக்கை தரும் செய்திகளில் மிக முக்கியமானது வளர்ந்த பொருளாதாரம் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திடம் சென்று சேர்ந்துள்ளது. வளர்ந்த பொருளாதாரத்தை முறையாக ஏழைகளின் மேம்பாட்டிற்காக உபயோகப்படுத்த அரசாங்கங்கள் சரியான பார்வையையும், புரிதலையும் கொண்டு செயல்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

அதே நேரத்தில் எல்லாத்தரப்பு மக்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும், எல்லா வசதிகளையும் பெற்று மதிக்கத்தக்க மரியாதையுடைய வாழ்க்கை வாழவேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது. இந்தச் சூழலை சந்தை பயன்படுத்துகின்றது ஆனால் அரசாங்கம் பயன்படுத்தவில்லை. இந்தச் சூழலில் அரசாங்கங்கள் திறமையுடன் அதிக கவனத்தை பொருளாதார வளர்ச்சிக்கு செயல்படுவதுபோல் பெற்ற வளர்ச்சியை ஏழைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் ஏழ்மையைக் குறைப்பதற்கும், அவர்கள் ஏழ்மையிலிருந்து விடுபடத் தேவையான கட்டமைப்புகளையும் திட்டங்களையும் கொள்கைகளையும் நிதி ஒதுக்கீடுகையும் செய்த ஏழ்மையின் பிடியில் இருக்கும் மக்களை பெருமளவு மேம்பாட்டிற்கான செயல்பாடுகளில் பங்கேற்க தயார் செய்ய வேண்டும் என்பதைத் தான் உலக வங்கி முதல் உள்ளூர் வளர்ச்சி நிறுவனங்கள் வரை கேட்டுக்கொண்டன.

ஆனால் அரசாங்கங்களின் நடவடிக்கைகள் சட்டம் இயற்றுவதாக இருந்தாலும், கொள்கைகள் உருவாக்குவதாக இருந்தாலும், திட்டங்கள் உருவாக்குவதாக இருந்தாலும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து அவசரமாக எடுத்து சாதனை படைத்துள்ளன. அதே வேகத்தில் ஏழைகளைப் பாதுகாப்பதற்கும் ஏழ்மையைக் குறைப்பதற்கும் ஏழைகள் பங்கேற்புடன் செயல் படக்கூடிய அமைப்பு முறைகளை உருவாக்க முற்படுவதில்லை என்பதுதான் நாம் இன்று பார்க்கும் எதார்த்தம். ஏழைகளுக்கான சமூக மேம்பாட்டுச் செயல்பாடுகளை அரசே ஏற்று நடத்தி ஏழ்மை குறைப்பும், சமூக மேம்பாடும் செய்து ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க செயல்படுத்திக் கொண்டிருக்கிறது பல நாடுகள்.



ஒரு பட்டம் போட்டு அதற்கு வாழ நினைப்பது தவறில்லை,
ஆனால் அந்த வட்டம்தான் வாழ்க்கை என்று நினைப்பதுதான் தவறு



ஆனால் இந்தியாவை தொடர்ந்து இந்திய கிராமத்து மக்களை வஞ்சிப்பதைத்தான் வாடிக்கையாக்கி வைத்திருக் கின்றது. இன்றைய சூழலில் ஒதுக்கப்பட்டவர்கள் கிராமத்து மக்களே. இந்தியாவின் முகம், அடையாளம் அனைத்து கிராமங்கள் தான். இன்னும் கிராமங்களில் 68% மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 58% மக்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தான் இயற்கையைப் பாதுகாக்கின்றனர். இவர்கள்தான் இயற்கை வளங்களைப் பாதுகாக்கப் போராடுகின்றனர். 8% மக்கள் ஆதிவாசிகள், இவர்கள்தான் காடுகளைப் பாதுகாக்கப் போராடுகின்றனர். 8% மக்கள் காட்டில் உழைத்து, பணி செய்து தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். 11% மக்கள் புலம்பெயர்ந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டியும், புதிய வாழ்வாதாரத்தையும் தேடி அலைபவர்கள். 2% மீனவர்கள் கடலைப் பாதுகாத்து அதில் தங்கள் வாழ்வாதாரத்தை வைத்து வாழ்கின்றனர்.

ஏறத்தாழ 72%-லிருந்து 78% மக்கள் தங்கள் வாழ்க்கையைப் போராட்டமாகக் கழிக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாடு கொண்டுவருவதற்காக விவசாயத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்தோம், காடுகளை அழித்தோம், இயற்கை வளங்களை, கட்டமைப்பு வசதிகளை உருவாக்கு கிறோம் என்று கூறி, தண்ணீராக இருந்தாலும் மணலாக இருந்தாலும் வேறு எந்த தாதுப் பொருளாக இருந்தாலும் அவைகள் அனைத்தையும் பெருமளவுக்கு சூறையாடினோம்.



இவைகள் அனைத்தையும் பாதுகாக்க எத்தனையோ சட்டங்கள், விதிமுறைகள் இவை அனைத்தையும் சந்தைக்காக ஆட்சியாளர்களின் உதவியுடன் கொள்ளைப்போக வைத்து விட்டோம். கிராமங்களை மேம்படுத்த, ஏழ்மையைக் குறைக்க, மக்களுககுத் தேவையான வசதிகள் செய்து கொடுக்க என உருவாக்கப்பட்ட 37 அரசுத் துறைகள் என்பதும் கிராமத்தை வாழவைப்பது என்பதைவிட கிராம மக்களை ஆட்டிப்படைக் கின்றது. அரசுத் துறைகள் என்பது இன்று அசுரத் தன்மையுடன் மக்களைக் கண்காணித்து தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டுள்ளன. இன்றுள்ள பிரச்சனை என்பது இயற்கை வள பேரழிவு. நம் போன்ற வளர்முக நாடுகளின் இயற்கை வளம் எந்த அளவிற்கு பாதுகாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படுகின்றனவோ அந்த அளவிற்கு ஏழ்மைக் குறைப்பு நடைபெறுகிறது.

ஏழைகளின் வாழ்நிலை அதுவும் கிராமங்களில் கொதிநிலைக்கு வந்துள்ளது. அதைத்தான் நாம் நெடுவாசலில், கதிராமங்கலத்தில் பார்த்தோம். மக்களாட்சி நடைபெறுகின்ற நாட்டில் பொதுமக்கள் குறிப்பாக அல்லற்படும்போது அரசியல் கட்சிகள் களத்தில் இறங்கிப் போராடி ஏழைகளைப் பாதுகாக்கப் பாடுபடும். ஆனால் இன்று கிராமத்து மக்களே இயற்கை வளங்களைப் பாதுகாக்க. வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க களத்தில் இறங்கிப் போராட அரசுத் திட்டங்களுக்கு எதிராகப் போராட தயாராகிவிட்டனர். இப்படிப்பட்ட மக்கள் இயக்கங்கள், தன்னெழுச்சிப் போராட்டங்கள் அனைத்தும் கட்சி சார்பற்றவை பொது மக்களால் ஆதரிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட மக்கள் போராட்டங்கள் நம் அரசியலை வேறு திசை நோக்கிச் செலுத்த உதவி கரமாக இருக்கின்றன.

இந்தியாவில் உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு ஏழைகளைப் பாதுகாக்க, அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல் கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் உரிமைக்கான பெரும் புரட்சி நடந்துள்ளது. உரிமைகளை வென்றெடுக்க பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த உரிமைகளுக்கான பாதுகாப்புச் சட்டங்களையும், ஏழைகளுக்கான பாதுகாப்புச் சட்டங்களையும் இன்றுள்ள உள்ளாட்சி கையிலெடுத்து நடைமுறைப் படுத்த முயன்றால் ஒடுக்குதல் இல்லாத, ஒதுக்குதல் இல்லாத, ஓரங்கட்டுதல் இல்லாத, புறந்தள்ளல் இல்லாத அனைவருக்குமான ஒரு கிராமத்தை உருவாக்கிவிடலாம். பசி, பட்டினி இல்லை, தீண்டாமை இல்லை, ஆதிக்கம் இல்லை, ஒடுக்குதல் இல்லை. அனைத்து தரப்பு மக்களும் எல்லா அடிப்படை வசதிகளையும் உள்ளாட்சி மூலம் பெற்ற மதிக்கத்தக்க மரியாதையுடைய மகிழ்ச்சியான மானுட வாழ்வு வாழும் இடமாக கிராமங்களை மாற்ற முடியும்.



ஏனென்றால் பஞ்சாயத்து என்பது தலைவர் கோலோச்சும் ஒரு முறை அல்ல. அது ஒரு கூட்டுத்தலைமைத்துவ முறை. எல்லாத் தரப்பு மக்களும் பங்கேற்று ஆளுகை நடத்தும் இடம்தான் பஞ்சாயத்து. கிராமங்களில் நடைபெறும் ஆளுகையில் எல்லாத் தரப்பு பிரதிநிதிகளும் இருப்பார்கள். இந்த அமைப்புத்தான் நேரடியாக மக்களுடன் தொடர்பு இருக்கிறது. கிராமசபைதான் மக்கள் பங்கேற்புக்காக உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு. எனவே இந்த உள்ளாட்சியை வலுப்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி செயல்பட வைத்தாலே எல்லாத் தரப்பு மக்களையும் உள்வாங்கிய ஒரு ஆளுகையையும். முன்னேற்றத்தையும் கொண்டு வர முடியும்.

கிராமங்களில் வளர்ச்சி மற்றும் மேம்பாடு கொண்டு வர கிராம வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அப்பொழுது அது அனைத்து தரப்பினருக்கான வளர்ச்சியைக் கொண்டுவரத் திட்டமிடுவதற்கு வாய்ப்பு தந்துள்ளது. ஒதுக்கப்பட்டவர்கள் உள்வாங்கப்படுவதற்கு ஆதிக்கம் செலுத்துவோரின் ஆதரவை நாடுதல் இயலாத காரியம். ஒதுக்கப்பட்டவர்கள் தனக்கு அருகாமையில் கிடைக்கும் வாய்ப்புகளையெல்லாம் பயன் படுத்தினாலே அனைவருக்குமான ஒரு கிராமத்தை உருவாக்கி விடலாம். அந்தத் தலைமை என்பது பதவி சுகம் அனுபவிக்கும் தலைமை அல்ல, ஊழியம் செய்யும் தலைமை. அந்தத் தலைமையை மக்கள் தேர்வு செய்தால் புதிய கிராமத்தை உருவாக்கி விடலாம்.




உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடியாததாகவே தோன்றும்





# கிராமம்

## நமது அன்பு சமூகம்




கிராமம் என்கின்ற வார்த்தை இருவேறு எண்ணங்களை நமக்குள் உருவாக்கும்.

ஒன்று: அழகு, சுத்தமான காற்று, தெளிந்த நீரோடை, மலை, ஆறு, மகிழ்ச்சியான மனிதர்கள், விவசாயம், அறுவடை....

இரண்டு: குப்பைகளின் சங்கமம், வறுமை, கந்தல் ஆடை மனிதர்கள், வற்றிய நீரோடை, அழுக்கு பை சுமந்து பள்ளி செல்லும் சிறார்கள், சத்தமாக ஒலிக்கும் பாடல்கள், சாதீய சண்டைகள், பஞ்சாயத்து, பிரிவினைகள்.

2011 - மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 68.84% பேர் கிராமத்தில் வசிக்கின்றனர். கிராமங்கேள இந்தியாவின் முதுகெலும்பு. கிராமங்கள் தன்னுடைய அடையாளத்தை இழந்தால், நம்முடைய நாடும் அதன் அடையாளத்தை இழந்து விடும்.

இந்தியாவில் மொத்தம் 640,867 கிராமங்கள் உள்ளன. அவற்றில் 17,089 கிராமங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. கிராமங்களில் தான் சமூகம் / சமூக வாழ்வு தழைத்தோங்கியது. ஆனால் இன்று...




### பண்டைய தமிழ்ச் சமூகத்தின் அடையாளங்கள்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் - என்பது தமிழ் பழமொழி. தமிழர்களின் வாழ்க்கை கோயிலை மையப்படுத்தியதாக இருந்தது. அதாவது அறநெறிகளில் புதைந்தாக இருந்தது.

வேலைகளின் பால் - பிரிந்த சமூகமாக இருந்தது. உதாரணமாக பானைத்தொழில் செய்தவர்கள் குயவர்கள் என்றும், வாணிபம் செய்பவர்கள் வணிகர்கள் என்றும், கருவி செய்பவர்கள் கொல்லர்கள் என்றும் வேலைகளின் நிமித்தம் தமிழ்ச் சமூகம் பிரிந்திருந்தது.

ஒவ்வொரு வேலை செய்பவருக்கும் கடமைகளும் பொறுப்புகளும் இருந்தன. வேலைகளுக்கு இடையில் பாகுபாடில்லை. ஒவ்வொரு வேலையும் மதிக்கப்பட்டது. புனிதமானதாகவே கருதப்பட்டது.

நில அமைப்புகளின்பால் மாறுபட்ட சமுதாயமாக இருந்த போதிலும் ஒருவரோடு ஒருவர் உறவு கொண்ட சமூகமாகவே இருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தை ஐந்தாகப் பிரித்த தமிழன், அது அதற்கென நியதிகளையும், வழிமுறைகளையும் வகுத்து இயற்கையோடும், மனிதர்களோடும் இயைந்து வாழ்ந்து வந்தான்.




இயற்கையோடும், பிற தமிழ்ச் சமூகங்களோடும் ஏன், பிற இனத்தவரோடும் தமிழன் இயைந்து வாழ்ந்ததால் தான்

'கல்தோன்றி மண்தோன்றா
காலத்தே மூத்தக்குடியில் பிறந்தது தமிழ்' - என தமிழர்களால் மார்த்தட்டிக் கொள்ள முடிந்தது.



நான் நூறு வெற்றிகளால் உருவானவன் அல்ல,
ஆயிரம் தோல்விகளால் தோன்றினவன்!

இன்று தமிழகத்தில் நடைபெற்று வரும் அகழ் ஆராய்ச்சிகள் மூவாயிரம் (3000) ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் அடிப்படையில் தன்னுடைய கிராமங்களை தமிழன் கட்டமைத்திருந்தான் என்பதினை பறைசாற்றுகின்றது.

ஒரே வரியில் சொல்வதானால் அனைத்து தரப்பினரையும் சமமாகப் பாவித்து தமிழன் உயர்வடைந்தான் எனக் குறிப்பிடலாம்.

உயர்வும், வளர்ச்சியும், மேன்மையும் அனைவரையும் போற்றி, பாதுகாத்து, உறவாடுவதில் தான் உள்ளது என்பதினை தமிழர்கள் உணர்ந்திருந்தனர்.

இதைத்தான் திருவள்ளுவர்

‘தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு’ - என்றார்.

குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

வளங்கள், கற்றவர், கல்லாதவர், செல்வமுடையோர், செல்வமில்லாதவர், ஆண்கள், பெண்கள் அனைவரும் கூடிப்பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

அவ்வாறு தான் தமிழ் சமூகம் இருந்தது. தமிழர்கள் வாழ்ந்தார்கள்.

அனைவரும் கூடிப் பொருந்தியுள்ள கிராமமே கிராமம் ஆகும். எப்போது இத்தன்மையிலிருந்து கிராமங்கள் மாறுபடுகின்றதோ அப்போது வளர்ச்சி தடைபடுகின்றது, குழப்பங்கள் உருவாகின்றன, அமைதியின்மை ஏற்படுகின்றது.

## தமிழர் உறவுகள் விரிசல் கண்டது எதனால்?

### 1 சாதீயம் பிறந்தது தமிழர் பண்பாடு தொலைந்தது

வேலைகளின் பால் பிரிந்து மதிப்போடும் மாண்போடும் வாழ்ந்திருந்த சமூகம் - சாதீயம் என்கின்ற கோட்பாடுகளுக்குள் வேலைகளைக் கொண்டு வந்து.



உயர்வான வேலை; தாழ்வான வேலை என்றும், குறிப்பிட்ட தொழில் செய்பவர்கள் உயர்ந்தவர்கள் என்றும், தாழ்ந்தவர்கள் என்றும் பிரித்தபோது தமிழர் வாழ்வு நிலை குலைந்து போனது.

நான் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன், அவன் தீண்டத்தகாதவன் - என்பதில் எப்போது ஒரு சமூகம் பெருமைப்பட ஆரம்பித்ததோ அப்போதே அது தனது பண்பாட்டு கூறுகளை இழந்துவிட்டது எனக் கூறலாம்.

சாதீய சண்டைகளும் கொலைகளும் இன்று மலிந்து விட்டன. கௌரவக் கொலைகள் இன்று தமிழ் நாட்டில் மூலை முடுக்கெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெற்றவர்களே, உடன் பிறந்த சகோதர, சகோதரிகளே - காதலித்தாள், காதலித்தான் என்பதற்காக கொல்லும் கொடுமை சமூக சீர்கேட்டின் உச்சம்.

சாதீய காரணங்களால் கல்வி நிறுவனங்களில் நடக்கும் அநியாயங்கள் நாம் தினமும் பத்திரிக்கைகளில் வாசிக்கின்றோம். கல்வி மறுக்கப்படுகின்றது. மிகப் பெரியபே பாராட்டங்களுக்குப்பி றகுஉ யர்க ல்விக் கூடங்களில் இடம் பிடித்தாலும் வன்கொடுமைக்கு ஆளாகும் அவலங்கள்.

செத்து ஆறடி நிலத்தில் புதைக்கும் போதும் சாதீயம் தன் கோரத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதில்லை. அது அவங்க கல்லறை, இது எங்க சுடுகாடு - என்ன இது?

ஒருவன் இன்னொருவனை அடிமைப்படுத்திப் பார்ப்பதில் இருக்கும் சுகம் தான் சாதீயத்தை தூக்கிப் பிடித்திருக்கும் மந்திரக் கோல்.

### 2 மதங்களும் தமிழரை கூறுபோட்டது




3000க்கும் மேற்பட்ட சாதிகள், 25,000க்கும் மேற்பட்ட உட்சாதிகள் மனிதனை கூறுபோட்டது போதாதென்று மதங்களும் பிரித்தன.

மதம் மனிதனை மனித நேயத்தோடும் பிறரோடு இணைந்தும் வாழ்வதற்கும் உதவும் வழிமுறை. தனக்குமேல் ஒரு சக்தி இருப்பதாக மனிதன் நம்பினான். தன்னால் பல இயற்கை நிகழ்வுகளை விளங்கிக்கொள்ள இயலாதபோது - அந்த சக்தியை கடவுளாக பாவித்தான், நம்பினான், பயந்தான், வேண்டினான், பலி கொடுத்தான்.

மதங்கள் இறுகிய நிறுவன அமைப்புகளாக மாறிய போது தன் மதம் மூலமே மார்க்கம், என் மதம் மட்டுமே உன்னைக் காப்பாற்றும் என்கின்ற எண்ணங்கள் மிகவும் வலுபெற்றன. தன் மதத்தை உயர்த்திப் பிடித்த



பொதுவாக வெற்றி என்பது மற்றவர்கள் கைவிட்டுவிட்ட பின்பும்
அயராமல் தொடர்வதாலேயே கிட்டுவதாகும் – வில்லியம் ஃபெதர்



அதே நேரத்தில் அடுத்தவர் மதத்தை அதாவது, பிற மதத்தை பின்பற்றுபவர்களை அழிக்கவும் துணிந்தான்.

மத வன்முறைகள் மிகவும் சகஜமாக நடைபெறும் பூமியாக நமது பூமி மாறிப்போனது. மதங்கள் மனிதனை மனிதனாக்குவதற்குப் பதிலாக மிருகமாக மாற்றுகின்றன.

மதத்தில் தவறா? அல்லது நாம் மதங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா? எல்லா மதங்களும் அன்பையும் ஆக்கப்பூர்வமான மார்க்கங்களையும் போதிப்பதாகவே கூறப்படுகின்றது.

## 3 மதத்தோடும், சாதியோடும் அரசியலும் இணைந்து கொண்டது



ஆக்கப்பூர்வமான அரசியல் தேவை. வெவ்வேறு கொள்கைகளும் நடைமுறைகளும் கொண்ட அரசியல் கட்சிகளும் தேவை. ஆனால் எப்போது அரசியல் கட்சிகள் மதத்திலும் சாதியிலும் ஊறித் திளைக்கின்றதோ, அது சொல்லொண்ணா துயரங்களை உருவாக்கும்.

சாதியால் பிரிந்த தமிழர், மதத்தால் மேலும் பிரிந்தனர். அரசியலால் இன்னமும் பிரிந்தனர். பிரிந்திட, பிரிந்திட, ஒற்றுமை மறைந்திட, மறைந்திட வளர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக காணாமல் போனது. ஒரு குறிப்பிட்ட சமூகம் மட்டுமே மேன்மை பெரும், பொருள் சேர்க்கும், அதிகாரம் செலுத்தும், பிறரைக் கட்டுப்படுத்தும்.

கட்சிகளும், கொடிகளும் அதிகமான அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா என்றால் அது கேள்விக் குறியாகவே தான் உள்ளது.

## 4 ஆணென்றும் பெண்ணென்றும்

பிரித்துப் பார்ப்பதற்கும், அடிமைப்படுத்துவதற்கும் பழகிப்போன சமுதாயம் அடுத்து தன் கையில் எடுத்த யுக்தி பாலினம். பெண்வழி சமூகமாக நாம் இருந்தோம். நிலங்கள் பெண்களிடம் இருந்தன என்றெல்லாம் நாம் பெருமைப் பாராட்டிக் கொண்டாலும் இன்று பெண் இனம் அடிமைப்பட்டு



கிடக்கின்றது. ஆணாதிக்க சமூகத்தின் வன்முறைகளுக்கு ஈடு கொடுக்க இயலாமல் அழிந்து கொண்டிருக்கின்றது.

உண்மைதான். ஆயிரம் (1000) ஆண்களுக்கு 945 பெண்கள் தான் உள்ளனர். ஆண், பெண் பாலின விகிதம் சரிசமமாக இருந்த நிலை மறைந்து விட்டது. 65 பெண்கள் (1000 ஆண்களுக்கு) இல்லை. இது ஒன்றே பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளுக்கு சாட்சி.

- திருமணமான பிறகு குடும்பத்திற்குள் நடக்கும் வன்முறை
- வரதட்சனைக் கொடுமை
- பெண் சிசுக் கொலை
- பெண் குழந்தை கடத்தல்
- பாலியல் வன்புணர்வு, துன்புறுத்தல்
- ஆசிட் ஊற்றுதல்

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகமாகி வருவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

**சாதியால் பிரிந்தோம்**
**மதங்களால் பிரிந்தோம்**
**அரசியல் கட்சிகளால் பிரிந்தோம்**
**ஆண் - பெண் என்றும் பிரிந்தோம்!**

கடவுளாகப் பெண்ணை வணங்குகின்றோம். ஆனால் பெண்களுக்கு எதிராக எவ்வளவு குற்றங்களை புரிகின்றோம்.

## 5 இயன்றவர் - இயலாதவரென்று



பிரித்துப் பிரித்துப் பழகிப் போன நமக்கு மாற்றுத் திறனாளிகளையும், மூன்றாம் பாலினத்தவரையும் ஒதுக்கி வைத்திட சொல்லியா கொடுக்க வேண்டும்.

இதுவரை நடந்ததை யோசிப்பதைவிட இனி எப்படி நடக்கவேண்டும் என யோசிப்பவர்களே வாழத் தெரிந்தவர்கள்!

நமது வீட்டில் நடக்க இயலாத அல்லது கண் தெரியாத ஒருவர் இருக்கிறார் - என வைத்துக் கொள்வோம். அந்த நபருக்கு நாம் எந்த தனிப்பட்ட வசதிகளையாவது செய்து கொடுக்கின்றோமா? ஏன் இயற்கை உபாதைகளைக் கழித்திட அவர்கள் படும்பாடு என்ன?

நமது கிராம சமூகங்கள் அவர்களுக்கு எவ்விதமான வசதிகளை உருவாக்கிக் கொடுத்துள்ளது. பட்டியலிட முடியுமா?



மூன்றாம் பாலினத்தவரைப் பார்த்து பரிகசிக்கின்றோம், எள்ளி நகையாடுகின்றோம். பெற்றவர்களே அவர்களிடம் ஏற்படும் மாறுதல்களைப் புரிந்து கொள்ள இயலாமல் அடிப்பதும், காயப்படுத்துவதும், வீட்டை விட்டே விரட்டி விடுவதும் இன்றும் நடக்கிறதுதானே!

கிராம சமூகங்கள் அன்பால் இணைந்திருக்கும் என்கின்ற நிலை மாறி, சாதியாலும், மதத்தாலும், அரசியலாலும், பெண்ணினப் பாகுபாட்டாலும் பிரிந்து கிடக்கும் சோகமான நிலைமையினையே நாம் தினமும் பார்க்கின்றோம், அனுபவிக்கின்றோம்.

**கிராமத்தை அன்பு சமூகமாக (பண்டைத் தமிழ்ச் சமூகமாக) கட்டமைக்க இளையோரே வாருங்கள். தலைமைப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள் - என்று அறைகூவல் விடுப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.**

நம்முடைய தமிழ்ச் சமூகம் ஒற்றுமையால் பின்னிப் பிணைந்து வளர்ந்திட்ட சமுதாயம். அதை மீட்டெடுப்பது ஒவ்வொரு இளையோரின் கடமையாகும்.

**முதலில்** சாதி கடந்து சிந்திக்கத் துவங்குங்கள். எதற்கு இந்த சாதி? இதனால் எதாவது பயன் இருக்கிறதா? அவனும் அவளும் என்னைப் போல் உயிரும் உணர்வும் உள்ளவர்கள்தான் - என் நம்புங்கள். சிந்தும் இரத்தம் அது யாருடையதாக இருந்தாலும் சிகப்பு தான். சாதி - வளர்ச்சிக்கான மிகப் பெரிய முட்டுக்கட்டை. நமது கிராமங்களை சற்று உற்றுப் பாருங்கள். இணைந்து வாழ்கின்றோமா? அல்லது பிரிந்து வாழ்கின்றோமா? **தீட்டு என்று பலரைப் பிரித்து வைத்திருக்கிறோமே! தீட்டு என்றால் என்ன?** சாதியத்தைத் தூக்கிப் பிடித்திடும் சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் வேரோடு அறுத்திடுங்கள்.



**இரண்டாவது**, மதம் கடந்து மனிதனாக வாழுங்கள். மதம் வேணுமா? இருக்கட்டும். அது உனக்கானதாக இருக்கட்டும். அதைப் பிறர்மீது திணிக்க வேண்டாம். கடவுள் என்ற ஒரு சக்தியிருந்தால் அது ஒன்றாகத்தான் இருக்க இயலும். ஆளுக்கு ஒரு பெயர் சொல்லி அழைத்திடுங்கள், தப்பில்லை. ஆனால் திணிக்க வேண்டாம். மதம் மாற்ற வேண்டாம். மதம் - என்ற ஒன்றைக்கொண்டு நம்மைச் சுற்றி மதில் சுவர் எழுப்பிட வேண்டாம்.



இளையோரே, உங்களால் மட்டும்தான் சாதி, மதம் என்கின்ற வலைகளை அகற்றிட இயலும். மனிதனை பிரித்தாளும் இந்த மதில் சுவர்களை உடைத்தெறிய முடியும்.

**மூன்றாவதாக,** சாதி, மதம், பெண்ணடிமை கடந்து நிற்கும் அரசியல் சக்திகளோடு கை கோர்த்திடுங்கள். இளையோரே உங்களுக்கு ஒரு அரசியல் தளம் வேண்டும். அது நீங்களே உருவாக்குவதாகவும் இருக்கலாம். சாதி, மதம் - அற்ற கட்சிகளுடன் கை கோர்ப்பதாகவும் இருக்கலாம். தனி நபர்துதிபாடும் கட்சிகளிடமிருந்து அகன்று இருங்கள்.



**நான்காவது,** ஆணும் பெண்ணும் சமம் என உறுதியாக நம்புங்கள். அதுவே வாழ்வின் மந்திரம் எனக் கொள்ளுங்கள். ஒருபோதும் எந்தச் சூழலிலும் வார்த்தையாலோ, செயலாலோ பெண்மையை கொச்சைப் படுத்தாதீர்கள். பெண்களை மதிக்காத அமைப்புகளிடமிருந்து விலகியிருங்கள். தாயை, தங்கையை மதிக்கும் நீங்கள் தாரத்தை இரண்டாம் தரமாக நடத்துவதும், அடிப்பதும், உதைப்பதும் எந்த வகையில் நியாயம்.

**ஐந்தாவதாக,** இயலாதோர் பால் கருணைக் கொள்ளுங்கள். அவர்களுக்காக உழைத்திடுங்கள். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் உருவாக்கிட பாடுபடுங்கள். மாற்றுத் திறனாளிகளையும் மூன்றாம் பாலினத்தவரையும் மதித்திட வேண்டும். மாண்புடன் நடத்திட வேண்டும்.

இளையோரே, தலைமை பொறுப்பேற்க வாருங்கள். மேற்கூறப்பட்ட 5 கூற்றுகளிலும் உங்களுக்கு உடன்பாடு என்றால் நீதான் இந்த சமுதாயம் விரும்பும் தலைவர். நமது கிராமங்கள் உன் தலைமையில் அன்பு சமூகங்களாக மாறட்டும்.

**உன்னுடன் பயணத்தில் துணையாக,**

***தே. சைலட்மோணி***



உன்னை வெறுப்பவர்களக்கு நீ கொடுக்கக்கூடிய தண்டனை
அவர்கள் கண்மன் நீ மகிழ்வுடன் வாழ்வது மட்டுமே!



தலைவர்கள் அறிவோம்

# இரட்டைமலை சீனிவாசன்



நவீன தமிழ்ச் சமூக அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத புரட்சியாளர் இரட்டைமலை சீனிவாசன் (1860-1945). பிரிட்டிஷ் ஆட்சியில் தலித்துக்களுக்காக எழுப்பிய உரிமைக் குரல், வட்டமேசை மாநாடு, பூனா ஒப்பந்தம், சட்டசபை தீர்மானங்கள் போன்றவை அவரை இந்திய தலித் அரசியல் வரலாற்றின் முன்னோடியாக தூக்கி நிறுத்துகிறது.

## முதல் தலித் பட்டதாரி

அன்றைய செங்கல்பட்டு மாவட்டத்தில் கோழியாளத்தில் பிறந்த இரட்டைமலை சீனிவாசன் பஞ்சம், சாதிக்கொடுமை ஆகிய காரணங்களால் சிறுவயதிலேயே தஞ்சைக்கு இடம்பெயர்ந்தார். திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வியைக் கற்ற அவர், கோயம்புத்தூர் அரசுக் கல்லூரியில் இளங்கலை படிப்பைத் தொடங்கினார். வெளிப்படையாகவே சாதிப்பாகுபாடு நிறைந்த அந்தச் சூழலில் சீனிவாசனோடு கல்லூரியில் 400 மாணவர்கள் படித்தனர். அதில் 10 பேர் தவிர மற்றவர்கள் பிராமணர்கள் என்பதால், சினிவாசன் மிகுந்த சிரமத்தோடு பட்டப்படிப்பை முடித்தார். தமிழகத்தில் மேற்கத்திய கல்வி முறையில் பட்டம் பெற்ற முதல் தலித் பட்டதாரி இரட்டைமலை சீனிவாசன்தான். இந்திய அளவிலும் அவரே முதல் தலித் பட்டதாரி எனவும் சொல்வதுண்டு.

1880களின் தொடக்கத்தில் நீலகிரியில் ஐரோப்பிய நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். அங்கு சீனிவாசனுக்கு தியாசபிக்கல் சொசைட்டியைச் சேர்ந்த மேடம் பிளாவட்ஸ்கி, கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் ஆகியோருடன் தொடர்பு கிடைத்தது. ஏற்கனவே அங்கிருந்த தன் உறவினர் அயோத்தி தாசப் பண்டிதருடன் இணைந்தும், தனித்தும் இரட்டை மலை சீனிவாசன் அவர்கள் அரசியல் செயல்பாட்டில் இணைந்து இருந்தார். தலித் வரலாற்றின் இருபெரும் ஆளுமைகளான அயோத்திதாச பண்டிதருக்கும், இரட்டைமலை சீனிவாசனுக்கும் அரசியில் பயிலகமாகவே நீலகிரி விளங்கியது.

## தலித் மக்களின் எழுச்சி நாயகன்



பறையன்
THE PARIYAN

தமிழக தலித் வரலாற்றைப் பொறுத்தவரை மக்கள் பலம் கொண்ட முதல் எழுச்சி நாயகன் என்றால் அது இரட்டைமலை சீனிவாசன்தான். எந்த சாதியின் பெயரைச் சொல்லி இழிவு படுத்துகிறீர்களோ, அதே அடையாளத்தில் மீண்டெழுவேன் எனும் உறுதியோடு இருந்தார். 1891-ல் பறையர் மகா ஜன சபை தொடங்கிய சீனிவாசன் அதன் மூலம் தாழ்த்தப்பட்டோர் தரப்பிலான கோரிக்கை, விண்ணப்பம், தலையீடு கூட்டம், தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினார்.

அப்போதைய அரசியல் வட்டாரத்திலும் சமூக தளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்திய அச்சுப் பண்பாட்டை உள்வாங்கி, 1893-ல் பறையன் என்ற பெயரில் இதழ் ஒன்றைத் தொடங்கினார். முதல் மூன்று மாதங்கள் மாத இதழாக வெளிவந்த அந்த இதழ், தாழ்த்தப்பட்டோரின் பேராதரவால் வார இதழாக மாறியது. 1900 வரை சொந்த அச்சகத்தில் அச்சாகி சனிக்கிழமை தோறும் வெளியான அந்த இதழுக்கு தமிழகம் கடந்தும் வாசகர்கள் இருந்தனர்.

தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினைகள், தீண்டாமைக் கொடுமைகள், பிராமணிய எதிர்ப்பு, காங்கிரஸாருக்குக் கண்டனம், கல்வி உரிமை, நிலமீட்புப் போராட்டம், அரசுக்குக் கோரிக்கைகள், தாழ்த்தப்பட்டோருக்கான உரிமை கோரல் ஆகியவை தொடர்பான செய்திகள் அந்த இதழில் தொடர்ந்து இடம்பெற்றன. வடமாவட்டங்களில் மட்டுமல்லாமல் தென்மாவட்டங்களில் நிலவிய சமூகச் சூழல் தொடர்பான பதிவுகளும், கிராமங்களில் நிகழும் அநீதி தொடர்பான தகவல்களும் இடம்பெற்றன. தாழ்த்தப்பட்டோரிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியதிலும், தாழ்த்தப்பட்டோரின் கோரிக்கையை அரசுக்குத் தெரியப்படுத்தியதிலும் அந்த இதழின் பங்களிப்பு மகத்தானது.

அப்போதைய கிருஷ்ணா மாவட்டத்தில் 28.04.1894 அன்று பஞ்சமர்களுக்காக சீனிவாசன், நில உரிமைப் போராட்டத்தை நடத்தினார். இதன் காரணமாக ஆங்கிலேய அரசு தாழ்த்தப்பட்டோருக்குப் பஞ்சமி நிலத்தை வழங்கியது. அதே ஆண்டில், இங்கிலாந்தில் நடக்கும் ஐசிஎஸ் தேர்வை இந்தியாவில் எழுத வேண்டும் என காங்கிரஸார் கோரிக்கை விடுத்தனர். அதற்காக சில நூறு பேரிடம் கையெழுத்து வாங்கி அரசுக்கு மனு அனுப்பியும் வைத்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சீனிவாசன் அந்தத் தேர்வை இங்கிலாந்தில்தான் நடத்தவேண்டும். இந்தியாவில் நடத்தினால் ஆதிக்க சாதியினர் சாதிபேதம் பாராட்டுவார்கள் எனக்கூறி 3412 பேரிடம் கையொப்பம் பெற்று ஆங்கிலேய அரசுக்கு அனுப்பி வைத்தார். இன்றைய அரசியலில் நடைபெறும் பிரமாண்ட பேரணி, தீர்மானம், அரசுக்கு நெருக்கடி, ஆதரவு என எல்லா ராஜதந்திரங்களையும் அன்றைய காலக்கட்டத்தில் செய்து காட்டியவர் சீனிவாசன்.



வெற்றி பெறுவது மிகவும் எளிதானதே. என்ன செய்கிறாய் என்பதை அறிந்து செய்...
செய்வதை விரும்பி செய்... செய்வதை நம்பிக்கையோடு செய்... – வில் ரோஜர்



இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் – கிண்டி, சென்னை.

## தென்னாப்பிரிக்காவில் இரட்டைமலை சீனிவாசன்

1900-களின் தொடக்கத்தில் பொருளாதார தேவைக்காக தென்னாப்பிரிக்கா சென்ற சீனிவாசன் 20 ஆண்டுகள் அங்கேயே வாழ்ந்தார். இந்திய வம்சாவளி தொழிலாளர்கள் மிகுதியாக வாழ்ந்த நட்டால் நகரில் வசித்த அவர் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அங்கு வழக்கறிஞராகப் பணியாற்றிய காந்தியுடன் பழகும் வாய்ப்பும் சீனிவாசனுக்கு கிடைத்தது. தென்னாப்பிரிக்காவில் காந்தியுடனான சீனிவாசனின் தொடர்புகள் குறித்த விரிவான ஆய்வுகள் தொடங்கப்பட வேண்டும்.

நீண்ட இடைவெளிக்குப் பின், லண்டன் வட்டமேசை மாநாட்டில் காந்தியைச் சந்தித்துத் தாழ்த்தப்பட்டோரின் நலன் தொடர்பாக சீனிவாசன் பேசினார். இரட்டை வாக்குரிமையை எதிர்த்து எரவாடா சிறையில் காந்தி உண்ணாவிரதம் இருந்தபோது, அம்பேத்கருடன் சென்று காந்தியை சந்தித்தார். காந்தி - அம்பேத்கர் இடையே கையெழுத்தான பூனா ஒப்பந்தத்தில் தாழ்த்தப்பட்டோர் சார்பாக இரட்டைமலை சீனிவாசன் கையெழுத்திட்டார்.

## ஆலய நுழைவின் ஆரம்பப் புள்ளி

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய சீனிவாசன் 1923-38 காலக்கட்டத்தில் சென்னை மாகாணச் சட்டமன்றத்தின் நியமன உறுப்பினராக இருந்தார். அப்போது, தாழ்த்தப்பட்டோர் உரிமைக்காகப் பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களைக் கொண்டு வந்தார். தாழ்த்தப்பட்டோர் பொது வெளியில் பிரவேசிக்கவும், சாலை தெருக்களில் நடக்கவும், பொது நீர்நிலைகளில் நீர் எடுக்கவும் வழிவகை செய்யும் தீர்மானத்தை 20.08.1924 அன்று சீனிவாசன் கொண்டுவந்தார்.

தீண்டாமை ஒழிப்பு, சாதிப் பாகுபாடு, ஆலய நுழைவு, நில உரிமை, இட ஒதுக்கீடு, கல்விக்கு நிதி ஒதுக்கீடு போன்றவை தொடர்பாக சீனிவாசன் முக்கியப் பங்காற்றினார். அரசு விடுமுறை தினங்களில் மதுக்கடை மூடல், பரம்பரை மணியக்காரர் முறை ஒழிப்பு, ஆலய நுழைவு, தொழுவத்தில் குற்றவாளிகள் கட்டும் முறை ஒழிப்பு, படிப்பறிவில்லாதவர்களிடம் கைரேகைகள் பெறும் முறையில் மாற்றம் போன்ற சமூக சீர்திருத்தச் சட்டங்களிலும் அவர் முக்கியப் பங்காற்றினார். இவரது பொதுவெளி பிரவேசத் தீர்மானமும், ஆலய நுழைவுத் தீர்மானமும் பாலக்காடு கல்பாத்தி அக்ரஹார நுழைவுக்கும், வைக்கம் கோயில் நுழைவுக்கும் முன்னோடியாக அமைந்தன.

## அம்பேத்கருடனான ஆத்மார்த்தமான உறவு

லண்டனில் 1930, 1931, 1932 ஆண்டுகளில் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகளில், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதி என சீனிவாசன் தன் கோட்டில் பட்டை அணிந்திருந்தார். பிரிட்டிஷ் பேரரசர் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளுக்கு விருந்து அளித்தபோது, அவரோடு கைகுலுக்க சீனிவாசன் மறுத்துவிட்டாராம். நான் அடிமைகளின் அடிமை, தீண்டத்தகாத வகுப்பிலிருந்து வந்தவன், என்னை நீங்கள் தொட்டால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்று கூறி, இந்திய சமூகத்தின் சாதி முகத்தை மன்னருக்கு விளக்கினாராம்.

வட்டமேசை மாநாட்டில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கினால்தான் தீண்டாமைக் கொடுமை ஒழியும், கல்வி வேலைவாய்ப்பில் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என சீனிவாசன் வலியுறுத்தினார். அம்பேத்கருடனான ஆத்மார்த்தமமான உறவு குறித்து, நானும் அவரும் நகமும் சதையும் போலப் பழகினோம். வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடினோம் என எழுதியுள்ளார்.

## கண்டறியப்படாத புரட்சியாளர்

இரட்டைமலை சீனிவாசனின் வரலாறு குறித்த தரவுகள் போதுமான அளவுக்கு நமக்குக் கிடைக்கவில்லை. 1939-ல் இரட்டைமலை சீனிவாசன் எழுதிய ஜீவிய சரித்திரச் சுருக்கம் என்ற சுயசரிதை நூலில், தனது அரசியல் செயல்பாட்டை ஓரளவுக்கு பதிவு செய்துள்ளார். அந்த நூல்தான் தமிழில் வெளியான முதல் தலித் சுயசரிதை என்று கருதப்படுகிறது. அந்த நூலில், தென்னாப்பிரிக்காவில் கழிந்த அவரது 20 ஆண்டு கால வாழ்க்கை பற்றிய புதிவுகள் அதிகமாக இல்லை.


அதேபோல் இரட்டைமலை சீனிவாசன் நடத்திய பறையன் இதழின் ஒரு பிரதிகூட இதுவரை கிடைக்கவில்லை. இதழின் செய்திகள் தொடர்பாக அரசுக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகள் மட்டுமே கிடைத்திருக்கின்றன. இரட்டைமலை சீனிவாசனின் 15 ஆண்டுகால சட்டமன்ற உரைகள், பல்வேறு ஆளுமைகளுடனான தொடர்புகள், அரசியல் போராட்டங்கள், முக்கியத் தீர்மானங்கள் ஆகியவை முழுமையாகத் தொகுக்கப் படவில்லை.




வரலாற்றில் புதைந்திருக்கும் இரட்டைமலை சீனிவாசனின் அனைத்துப் பரிமாணங்களும் கண்டறியப்பட வேண்டும். அவை தலித் வரலாறு குறித்த குறிப்புகள் என்பதோடு மட்டுமல்லாமல், அன்றைய தமிழக அரசியல் வரலாறாகவும் இருக்கும்.



சுமைகளைக் கண்டு நீ துவண்டுவிடாதே...
இந்த உலகத்தை சுமக்கும் பூமியே உன் காலடியில்தான்!






**அனிதா** – நமக்கும் நமது கிராமங்களுக்கும் பழக்கமான பெயர்தான். ஆனால் இன்று இப்பெயர் தமிழகத்தில் சமூக நீதி மறுக்கப்பட்டதின் அடையாளமாக மாறிவிட்டது. அனிதாவின் தற்கொலை நிச்சயமாக நமக்கு ஏற்புடையதல்ல. எந்தப் பிரச்சனைக்கும் தற்கொலை தீர்வாக அமைந்திட முடியாது. மருத்துவப் படிப்பு – ஒன்றுதான் படிப்புமல்ல.

நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று – தமிழகத்தில் கல்வியில், அதுவும் மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் சமூக நீதியைக் குழித்தோண்டி புதைத்தது.

நமது முன் விரிந்திருக்கும் கேள்விகள் பல... அவற்றில் சில...


- மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க +2 மதிப்பெண்கள் போதாதா? போதாதெனில் பிறகு ஏன் +2 தேர்வுகள்?
- CBSE பாடத்திட்டங்களின் அடிப்படையிலேயே NEET தேர்வு கேள்விகள் இருக்குமெனில் மற்ற பாடத்திட்டங்கள் எதற்கு?
- A/C வகுப்பறையில் படித்தவர்களையும் ஆசிரியரே இல்லாமல் படித்தவர்களையும் ஒரே வகையான போட்டியில் போட்டி போட்டு வெற்றி பெறு என்பது கேலிக்கூத்து தானே?
- CBSE பாடத்திட்டத்தில் ஏழை மாணவ மாணவிரால் படிக்க இயலுமா? CBSE பள்ளிகள் பினம் தின்னும் கழுகாக அல்லவா இருக்கின்றது?
- சமச்சீர் பாடத்திட்டம் சரியாக வடிவமைக்கப்படவில்லையா?

இன்னும் பல கேள்விகள் உண்டு. விடை கூற வேண்டியவர்கள் சாக்குபோக்கு சொல்லும் சூழலில் உள்ளனர்.

இளையோர்கள் தன்னம்பிக்கை இழக்காமல் இருக்க வேண்டும். **ஒரு கதவு அடைக்கப்பட்டால் இன்னொரு கதவு திறக்கும் என்கின்ற நம்பிக்கை வேண்டும்.** நாம் தோற்பது எப்போதெனில் – நம்மில் நம்பிக்கை மறைந்து போகும்போது தான்.




**அனிதா உன்னை இழந்துவிட்டோம்**
**உறுதி கூறுகின்றோம்**
**போராடி முன்னேறுவோம் - என்று.**




**நன்கொடைகள் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**

| | |
|---|---|
| முன் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 4000/- |
| பின் அட்டை வெளிப்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 5000/- |
| பின் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 3000/- |
| உள் முழு பக்கம் (ஒரு கலர்) | ரூ. 2000/- |
| உள் அரை பக்கம் (ஒரு கலர்) | ரூ. 1000/- |




இவ்விதழின் கதைகைளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கனவு இதழின் நிர்வாகம் பொறுப்பல்ல.

படைப்புகளை பிரதி எடுத்துவைத்துக் கொண்டு எங்களுக்கு அனுப்பவும்.



வியர்வைத் துளிகளம், கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம்!
ஆனால், அவைதான் உன் வாழ்வை இனிமையாக மாற்றும்!



# மதக்கலவரமுன்னா என்ன?

‘அம்மா, மதக்கலவரமுன்னா என்னம்மா?’

‘சாப்பிடு. ஒரு இட்லிக்கூட இன்னும் முழுசா சாப்பிடல’

‘சொல்லுமா... மதக்கலவரமுன்னா என்ன?’

‘செருப்பு கிழிஞ்சிரும். ஸ்கூலுக்கு நேரமாச்சு, சாப்பிட்டு போய் சீக்கிரம் ரெடியாகு’

‘எனக்கு இட்லி வேண்டாம்’

3-ம் வகுப்பு படிக்கும் தன் மகள் காவ்யாவின் பிடிவாதம் அவளுக்குத் தெரியும். சாப்பிடுடா... இன்னைக்கு எக்ஸாம் வேற - குரலில் கடுமை தளர்ந்தது.

‘இங்க என்ன ஒரே சத்தம். காவ்யா சாப்பிடலயா?’

‘அப்பா, மதக்கலவரமுன்னா என்னப்பா?’

‘ஏன், இப்ப இந்த கேள்வி?’

‘அவள சாப்பிடச் சொல்லுங்க. ஸ்கூல் பஸ் வரப்போகுது. இவங்க மிஸ் திட்டப் போறாங்க.’

‘நீ சொல்லுப்பா. மதக்கலவரமுன்னா என்ன?’

‘எதுக்குமா கேட்குறே?’

‘எங்க டீச்சர் உங்க அப்பா என்ன செய்கிறாங்கன்னு கேட்டாங்க.’ அதற்கு என் பிரண்ட் ‘அவனுடைய அப்பா மதக்கலவரத்துல செத்துட்டாருன்னு’ சொன்னான்.

‘ஐயா இருக்காங்களா’ - வாசலில் ஒரு கூட்டம். ஊர் பெரியவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள்.

‘இதோ வரேன்.’

‘அப்பா சொல்லிட்டு போங்க.’

‘வந்து சொல்றேன்’

காவ்யா முகம் வாடியது. அப்பாவின் பின்னாலேயே போனாள்.

‘வாங்க... உட்காருங்க.’

‘ஐயா, பசங்க இந்த வருஷம் திருவிழாவில் தேரை முஸ்லிம், கிறிஸ்தவ தெருக்கள் வழியாகவும், இழுக்கனுமுன்னு சொல்றாங்க.’

‘போலீஸ் பெர்மிஷன் கிடைக்காதே.’

‘அது தெரிஞ்சது தானே.’

‘கிடைச்சாலும் கிடைக்காவிட்டாலும் தேரு எல்லா தெருவிலேயும் போகனும்.’

‘பிரச்சனை வரலாம். அடிதடி நடக்கலாம். இரண்டு மூணு பேரு உயிருக்கூட போகலாம்.’

அவரவர் தங்களுடைய கருத்துக்களை சொன்னார்கள்.

காவ்யா பயத்துடன் அப்பாவுடன் ஒட்டிக் கொண்டாள். மகளின் தலையை வருடிக் கொடுத்துக் கொண்டே...

‘சிறப்பா திருவிழாவை கொண்டாடுவோம்! அதற்கான ஏற்பாடுகளை செய்வோம்’ - என்றான்.

அனைவரும் கலைந்தனர்.

‘வாடி இங்க... ஸ்கூலுக்கு நேரமாச்சு.’

‘அப்பா...’

அவனுக்கு புரிந்தது, காவ்யாவுக்கு புரிந்ததென்று... ‘மதக்கலவரம்.’


அப்பாவை பார்த்துக் கொண்டே ஸ்கூல் பஸ்ஸில் ஏறினாள்.

அந்தப் பார்வை இவனுக்குள் இன்னொரு கேள்வியை விதைத்தது.





**உன் முகத்தை எப்போதும்
சூரியனை நோக்கியே வைத்திரு,
அப்போது உன் நிழல்
உனக்குப் பின்னாலே இருக்கும்**

• *Walt Whitman*





நம்பிக்கையுடன் நகர்ந்துகொண்டே இரு நதி போல...
ஒரு இடத்தில் வெற்றி காத்திருக்கும் கடலாக...!





# தற்கொலை தீர்வல்ல கோழைத்தனம்

வருடந்தோறும் 8,00,000 பேர் உலகில் தற்கொலை செய்வதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அவர்களில் 1,35,000 (17%) பேர் இந்தியர்கள். நாம் உலக மக்கள் தொகையில் 17.5% பேர். 1987-லிருந்து 2000 வரை தற்கொலை செய்பவர்களின் விகிதம் 1 லட்சம் பேருக்கு 7.9 சதவீதத்திலிரந்து 10.30 சதவீதமாக அதிகரித்துள்ளது.

15 வயதிலிருந்து 29 வயதிற்குட்பட்டவர்களில் தற்கொலை செய்பவர்களில் அதிகமானோர் இந்தியர்கள் (2012 Lancet Report).

கல்வியில், பொருளாதாரத்தில், அறிவியல் சிந்தனைகளில், மூடப் பழக்கவழக்கங்களை களைவதில், பெண்ணுரிமை பேணுவதில் முதல் மாநிலமாக இருந்த தமிழகம் இன்று தற்கொலையில் மகாராஷ்டிராவிற்கு அடுத்த இடத்தில் உள்ளது. ஒரு மணி நேரத்திற்கு ஒரு மாணவன் தற்கொலை செய்வதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இளையோர் வாழ்வின் சவால்களை சந்திக்கின்ற திறன் இல்லாமல் போனது ஏன்? தற்கொலையே சிறந்த தீர்வு என இளம் வயதினர் நினைப்பதற்கு என்ன காரணம்?

## 1 தன்னம்பிக்கை வளர்க்காத கல்வி



உன்னால் முடியும், நீ சாதிக்கப் பிறந்தவன், பிறந்தவள் - என்று உரமூட்ட வேண்டிய கல்வி இன்று மாணவர்களின் தன்னம்பிக்கையை கொன்று புதைக்கிறது. பள்ளியின் எதிர்பார்ப்புகளை, பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியாமல் விபரீத முடிவெடுக்கும் இளையோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

தரமான கல்வி கொடுக்கின்றோம், உலகத்தரம் எங்கள் தாரக மந்திரம், போட்டிகள் நிறைந்த இச்சமூகத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள மாணவர்களை தயாரிக்கிறோம், பள்ளிக் கல்வி முடித்தவுடன் இந்தியாவின் உயர் கல்வி நிலையங்களில், வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் அட்மிஷன் உறுதி - என்று வியாபார ரீதியில் ஓலமிடும் பள்ளிக் கூடங்கள் இளையோரின் பள்ளிப் பருவத்திற்கு பாடை கட்டிவிட்டது மட்டுமல்ல, சமூகத்தில் வாழ இயலாத நிலைமைக்கும் அவனை/அவளைத் தள்ளி விடுகின்றது.

பெற்றோர்கள் நிச்சயம் விதிவிலக்கல்ல. காலையில் 7 மணிக்கு பள்ளிக்குச் செல்லும் என் பிள்ளை மாலை 7 மணிக்குத்தானே வீட்டுக்கு வருகின்றான். 12 மணி நேரங்கள் பள்ளிக்கூடத்தில் - இதை பெற்றோர்கள் பெருமையாக நினைக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலேயே படித்து விடுகின்றான். நாம் டியூஷன் பார்க்க வேண்டாம் - என்பதிலேயே பெருமைப்பட்டுக் கொள்பவர்கள். தங்களுடைய பிள்ளைகளின் மனநிலையைப் புரிந்து கொள்ளத் தவறி விடுகின்றார்கள்.


இளமைப் பருவம் தேர்வு, மதிப்பெண்கள், தோல்வி, வெற்றி - என்றே கழிந்து விடுகின்றது. தங்களுக்குள் ஏற்படும் உடல், உள்ள மாறுபாடுகளைப் புரிந்து கொள்வதற்குக்கூட பள்ளிகளும் பெற்றோர்களும் வாய்ப்பளிப்பதில்லை.

ஒன்றாம் வகுப்பு படிக்கும் மாணவி தன்னுடைய அம்மாவைப் பார்த்தவுடன் துள்ளிக் குதித்து ஓடி வருகின்றாள். அள்ளி வாரி மார்போடு அரவணைக்க வேண்டிய தாய் - பிள்ளையிடம் கேட்கின்றாள் 'டைரி' ஒழுங்காக எழுதினாயா? 'பேப்பர் கொடுத்தாச்சா?'

படிப்பு, படிப்பு - திணிக்கப்படும்போது அது அறிவாக மாறுவதற்கான வாய்ப்பினை இழந்து விடுகின்றது. கற்பவைகளை மாணவர்கள் அசைப் போட்டுப் பார்ப்பதில்லை. அறிவியல் பூர்வமாக அலசுவதில்லை. 'ஏன்? எதற்கு?' - என்கின்ற கேள்விகளுக்கு வாய்ப்புக்களே இல்லை.

மாணவர்கள் எந்தளவிற்கு மனப்பாடம் செய்கின்றார்கள் என்பதற்கு மதிப்பெண் போடும் கல்வி நிலையங்கள் எதார்த்தமாக, அறிவியல் பூர்வமாக, விவேகமாக, மாறுபட்டு, சமூகக் கரிசனையோடு, புதுக்கோணங்களில் சிந்திப்பவர்களை கண்டு கொள்வதில்லை.

மிரட்டியே படிக்க வைத்து விடலாம், மிரட்டியே நல்லவர்களாக மாற்றிவிடலாம் என்று பகல் கனவுகள்



துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே! - மகேஸ்வரி ராஜேந்திரன்

காண்கின்றார்கள். முடிவெட்டு, நகம் வெட்டு, சட்டையை உள்ளே போடு – இல்லையா? டைரியில் எழுதுவேன் – மிரட்டுவது. பெற்றோர்களை அழைத்து வா என்று காயப்படுத்துவது, வகுப்பறைவிட்டு வெளியேற்றுவது, சக மாணவர்கள் முன்பு அசிங்கமாகப் பேசுவது, குறிப்பாக பிறபால் மாணவர்களின் முன்பு வேதனைப்படுத்துவது – மாணவர்களை உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றது.

படிப்பும் தேர்வும் ஏளனத்திற்கு உள்ளாவதும் தான் வாழ்க்கை என்று நினைத்துக் கொள்கிறான். இத்தகைய அமைப்பு ரீதியான ஒடுக்குமுறையை, கல்வித் திணிப்பை எப்படி சமாளிப்பது – வழி தெரியாமல் விழிபிதுங்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் ஆயுதம் தற்கொலை. ஒவ்வொரு இளையோரின் தற்கொலையும் இச்சமுதாயத்திற்கான பாடம்.

## 2 நேரம் செலவிட முடியாத பெற்றோர்



நேரமில்லை, யாருக்கும் தேவையான அளவிற்கு நேரமில்லை. அதிலும் குறிப்பாக பெற்றோர்களுக்கு பிள்ளைகளுடன் தரமான நேரம் செலவழிக்க நேரமில்லை. பிள்ளைகளுடன் என்ன நேரம் செலவழிப்பது? – பல பெற்றோர்கள் கேட்கின்றார்கள். அவன் / அவள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுக்கின்றோம். நல்ல சாப்பாடு போடுகின்றோம். அவளுக்காகத்தான் ஓடியாடி உழைக்கின்றோம், சம்பாதிக்கின்றோம், சேமிக்கின்றோம். நல்ல இடத்தில் திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தானே இதையெல்லாம் செய்கின்றோம்.

பெற்றோர்களின் கவலையெல்லாம் நினைப்பெல்லாம் 'இன்று', 'இப்போது' என்பதற்கு பதில் '10 வருடத்திற்குப் பிறகு', 'திருமணத்தின்போது' – என்றே அமைகின்றது.

எத்தனைப் பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளிடம் பேசுகின்றீர்கள்? எத்தனைப் பேர் அவர்களுடன் சேர்ந்து சிரிக்கின்றீர்கள்? எத்தனைப் பேர் அவர்களுடன் விளையாடுகின்றீர்கள்? – இது என்ன விளையாடனுமா! சின்ன பிள்ளைத்தனமாக இல்ல இருக்கு?!

பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துக் கொண்டே போகின்றது. புரிதல் என்பது கொஞ்சம்கூட இல்லை. 'பெத்தவங்க செய்யட்டும்' என்று பிள்ளைகளும். 'பெத்துட்டோம் செய்வோம்' என்று பெற்றோர்களும் கடமை, பொறுப்பு என்கின்ற வளையத்திற்குள்ளே வாழ்க்கையை நகர்த்துகின்றனர்.

பெற்றோர் – பிள்ளை என்பது உறவு. அது புரிதல்களின் மீது கட்டப் படுவது. அந்த உறவே உற்சாகம். அந்த உறவே மகிழ்ச்சி, நிறைவு என்று பெற்றோர்களும் நினைப்பதில்லை, பிள்ளைகளும் நினைப்பதில்லை.

இளமைப்பரும் ஏற்படுத்தும் உணர்வுகள், புரிதல்கள், புரியாதவைகள், சந்தேகங்கள், ஆதங்கங்கள் – இவைகளை பெற்றோர்களிடம் பகிர்ந்து கொள்ளலாமா? என்று பிள்ளைகளுக்குத் தெரிவதில்லை. அப்படியே பிள்ளைகள் பகிர்ந்து கொண்டாலும் எவ்வாறு அவர்களுக்கு பதில் கூறுவதென்று பெற்றோருக்குத் தெரிவதில்லை.

குடும்பமும் – இன்று கல்வி நிலையங்களின் தொடர்ச்சியாக மாறிப் போனது. போதனைகளும், கட்டுப்பாடுகளும், கட்டாயங்களும், வலியுறுத்தல்களும். தண்டனைகளும் – இன்று பெற்றோர் பிள்ளைகளுக்கான இடைவெளியை அதிகமாக்கிக் கொண்டே போகின்றது.

வீட்டில் எந்த நேரமும் போனும் கையுமாக இருக்கும் பெற்றோர், தொலைக்காட்சி முன்பே வாழ்கின்ற பெற்றோர் – என்ன செய்வார்கள் பிள்ளைகள். புரியாத வினாக்களுக்கு விடைகள் எப்படித் தெரியவில்லையோ? பல நேரங்களில் தெரிந்த வழி, எளிய வழி தற்கொலை. அதுதானே நடக்கிறது தமிழகத்தில் தற்போது.

## 3 சிதையும் குடும்ப உறவுகள்

என்னாச்சு நம்முடைய குடும்பங்களுக்கு. அதிகரிக்கும் விவாகரத்துக்கள், பிரிந்து வாழுதல். வேறு நபருடன் வாழுதல், ஒன்றுக்கும் மேற்பட்ட பார்ட்னர்கள் – நேரிடையாக பிள்ளைகளைப் பாதிக்கின்றது.

அப்பா அம்மாவை அடிக்கிறார். அம்மாவை அப்பா கொன்னுட்டாங்க. அம்மா அப்பாக்கூட இல்லை. அப்பா எங்க இருக்காருன்னு தெரியல – இவைகளை பிள்ளைகள் பகிரும்போது நெஞ்சம் வெடித்து விடும் போல் உள்ளது. 15 வயதில் கல்யாணம். 18 வயது நிரம்புவதற்குள் இரண்டு / மூன்று குழந்தைகள். உடல் நலம் போச்சு, கற்பனை போச்சு, ஆசைகள் போச்சு – பல பெண்கள் அங்கலாய்ப்பதை கேட்கிறோம். தனிநபர்கள் தப்பு செய்கின்றார்கள் என்பதைவிட இந்த சமுதாயம் தவறு செய்கின்றது.


கூட்டுக் குடும்பங்கள் கிராமங்களில் கூட அரிது. கூட்டுக் குடும்பங்கள் தேவையா? இல்லையா? என்கின்ற விவாதத்திற்குள் போகவில்லை. ஆனால், கூட்டுக் குடும்பங்களுக்குள் பிள்ளைகளுக்கு என்று இருந்த ஓர் இடம் இன்று இல்லை. யாராவது ஒருவர் பிள்ளைகள் சொல்வதைக் கேட்டார்கள், கூட்டுக் குடும்பங்களில் பிள்ளைகளுடன் விளையாடினார்கள், ஆறுதல்படுத்தினார்கள், யாராவது support செய்தார்கள், உற்சாகப்படுத்தினார்கள்.



ஆனால, இனறு அபபா, அமமா – உறவு சரியில்லையென்றால் மிகவும் பாதிக்கப்படுவது குழந்தைகள் தான். பக்கத்து வீட்டுப் பிள்ளைகளைப் பார்த்து அவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் தங்கள் பெற்றோருடன் பைக்கில் போகும்போது நெஞ்சம் வலிப்பதை உணர்கிறார்கள்.




ஊக்குவிக்க ஆள் இருந்தால், இன்று ஊக்கு விற்பவன்கூட
நாளைக்கு தேக்கு விற்பான்!



பெற்றோர்களின் கவனிப்பு இல்லாதபோது. முதிர்ந்த நடைமுறைகளுக்கு உட்படுகிறார்கள். வீட்டைவிட்டு பிள்ளைகள் அதிகம் வெளியேறுவதற்கும், தெருவோரப் பிள்ளைகளாக மாறுவதற்கும் சிதைகின்ற குடும்ப உறவுகள் தான் முதல் காரணம்.

யாருமே நமக்கில்லை, நமக்கென்று நல்ல பெற்றோர் இல்லை என்ற இந்த எண்ணங்கள் நஞ்சினும் கொடியது. இத்தகைய உணர்வுகளை எதிர்கொள்ள முடியாத பிள்ளைகள் எடுத்திடும் எளிதான முடிவு தற்கொலை.

## 4 மலியும் சமூக ஊடகங்கள்



ஊர்த் திருவிழா, பள்ளி ஆண்டுவிழா, திருமண விழா – போன்றவைகள் தான் ஒரே பொழுதுபோக்கு என்றிருந்த நிலை இன்று முற்றிலும் மாறிவிட்டது. சமூக வலைத்தளங்கள் இளையோர்களின் வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது.

பள்ளி போரடிக்கிறது, குடும்பங்கள் புரிந்து கொள்ளவில்லை, பெற்றோர்களுக்கு போதிய நேரமில்லை – என்ன செய்வார்கள் பிள்ளைகள். வீட்டுக்கு 5 செல்போன்கள் வந்தாகிவிட்டது. கணவனுக்குத் தனி, மனைவிக்குத் தனி, பிள்ளைகளுக்கும் தனித்தனி. வாட்ஸ்அப்பில் செய்திப் பரிமாற்றம். நேரிடையாக பேச யாருக்கும் நேரமில்லை, ஏன் விருப்பமும் இல்லை. முகநூலிலேயே பிறந்தநாள் / திருமண நாள் வாழ்த்து தெரிவிக்கும் பெற்றோர்.

பள்ளிப் பருவத்திலேயே ஸ்மார்ட் போனை கரைத்துக் குடித்து வைத்திருக்கின்றார்கள் பிள்ளைகள். அவர்களுக்கு தெரியாத app-இல்லை. விரல் நுனியில் தகவல்களை வைத்திருக்கிறார்கள். தகவல்கள் இருக்கின்றது என்பதைவிட தாறுமாறாகப் பரிமாற்றம் செய்கின்றார்கள். தகவல்கள் உண்டு. ஆனால் அவை நல்லவையா? கெட்டவையா? ஆராய்ந்து அலசிட அவர்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. எத்தகைய தகவல்களை பரிமாற வேண்டும் – அவர்களுக்கு யாரும் விளக்க வில்லை.

பிள்ளைகள் பெற்றோர்களிடம் சொல்லாமல் சொல்வது – உங்களுக்குத் தான் என்னுடன் பேச நேரமில்லையே? பிறகு நான் போனில் என்ன தேடுனா உங்களுக்கு என்ன? பிள்ளைகளிடம் நேரம் செலவழிக்க இயலாத பெற்றோர்களும், விரும்பாத பெற்றோர்களும் – தங்களுடைய போனை தாராளமாக கொடுத்துவிடுகின்றார்கள். நம்மைத் தொந்தரவுச் செய்யாமல் இருந்தால் போதும். வயதுக்கு மீறிய வளர்ச்சியை நாம் இன்று சிறுவர்களிடம் காண்கின்றோம். இது வளர்ச்சியா அல்லது பிள்ளைகளைச் சிதைக்கும் விசயங்களா? இச்சமுதாயம் இன்னும் ஆழமாக அலச வேண்டும்.

இன்று ஊடகங்கள் பங்கேற்பதையும், படிப்பதையும், வாசிப்பதையும் கொன்று குவித்துவிட்டன. அன்று ஊர் திருவிழாக்களில் ஓடியாடி, மகிழ்ச்சியோடு பங்கேற்றோம். கையில் கிடைத்த பத்திரிக்கைகளை எல்லாம் போட்டிப்போட்டுக் கொண்டு வாசித்தோம், சேர்ந்து படித்தோம். ஆனால் இன்று சமூக வலைத்தளங்கள் பிள்ளைகளின் சிந்தனைச் சக்தியை சிதைத்து விட்டன. மாற்றி யோசிப்பதற்கும், வித்தியாசமாக யோசிப்பதற்கும், சமத்துவமாக சிந்திப்பதற்கும் – இன்று வாய்ப்புகள் மிகவும் குறைந்து வருகின்றது.

தனிமையில் பிள்ளைகள் அதிக நேரம் செலவழிக்கின்றனர். அதற்கு இந்த கைப்பேசிகள் உதவுகின்றன. தனிமையில் இருந்து, தன்னந்தனியே சிந்தித்து, பிரச்சனைகள் எல்லை கடக்கும்போது இளையோருக்கு தெரிந்த வழி தற்கொலை.




## 5 அக்கறையில்லா அரசியல்


இன்று தமிழகத்தில் பலரும் கேட்பது – தமிழ்நாட்டில் என்னதான் நடக்குது. ஒரு காமராஜரை நினைத்து பெருமைக் கொள்கின்ற நாம் – நல்ல தலைவர்களை தேடுகின்றோம். அரசியல் – இன்று இளையோர்களின் வளர்ச்சியில் எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளது என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.

அனிதா – மருத்துவக் கனவில் மிதந்த ஏழை மாணவியை காவு கொடுத்த நாடு தானே தமிழ்நாடு. படித்தாலும் வாய்ப்பில்லை, போராடிப் பார்த்தாலும் விடிவில்லை என்றால் என்னதான் செய்வது. அனிதா போன்ற ஆயிரமாயிரம் அனிதாக்களுக்கும் ஆன்றனிக்கும் வழிகாட்ட தலைவர்கள் இல்லை.

கல்வி இன்று வியாபாரமாக மாறுவது அரசியல் தலைவர்களுக்கு தெரியாதா? கல்வி இன்று தனியாரிடம் மாட்டிக் கொண்டது இவர்களுக்கு தெரியாதா? திறன்படைத்த மாணவர்கள் இல்லை என்றால் வருங்காலம் சூனியமாகி விடும். எல்லாம் தெரியும். ஆனால் அரசியல் ரீதியான எந்த முடிவுகளும் மாணவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக எடுப்பதில்லை.

கிராமத்து மாணவன் படிக்க வேண்டும் என்று சோறு போட்டார் காமராஜர். ஆனால் இன்று அந்த சோற்றுக்கு மேல் எவ்வளவு அரசியல், எவ்வளவு கொள்ளை. கிராமப் பள்ளிக்கூடங்களில் போதுமான வசதிகள் இல்லை, ஆசிரியர்கள் இல்லை. நல்ல உடையில்லை, உணவில்லை. அச்சூழலில் படித்த மாணவன் குளிர் சாதன அறையில் படித்த மாணவனுடன் போட்டிப் போட வேண்டுமாம். என்ன கொடூரம் இது. அறிவுக்கு அங்கீகாரமாம்!

ஓடி ஓடி வாழ்வின் விளிம்புக்கு தள்ளப்படும் போது இளையோர்கள் என்னதான் செய்வார்கள். தெரிந்த எளிதான வழி தற்கொலை.




மனிதன் உணவின்றி 40 நாட்களும், நீரின்றி 3 நாட்களும், காற்றின்றி 3 நிமிடமும் உயிர் வாழலாம். ஆனால் நம்பிக்கையின்றி 3 நொடிகூட வாழ இயலாது!

**வேண்டாம்... தற்கொலை...**
**வாழ்ந்து பாருங்கள்...**
**ஆயிரம் கதவுகள் அடைபடட்டும்...**
**முயலுங்கள்...**
**நிச்சயம் முன்னேறுவீர்கள்...!**

தன்னம்பிக்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். தற்கொலை எண்ணங்கள் உங்களில் பல்வேறு காரணங்களால் உருவாகலாம். அவைகளை தடுத்திட வேண்டும், தகர்த்திட வேண்டும்.

## இளையோர்கள் தற்கொலை எண்ணத்தில் ஆட்படாமல் இருப்பது பெற்றோர்களிடம் உள்ளது




1. பிள்ளைகளுடன் தரமான நேரம் செலவிடுங்கள்.
2. பிள்ளைகளை எப்போதும் உற்சாகப்படுத்துங்கள். பாசிட்டிவாக பேசுங்கள், உன்னால் முடியும் என்று ஊக்கப்படுத்துங்கள்.
3. பிள்ளைகளுடன் சேர்ந்து சமையுங்கள், உண்ணுங்கள், விளையாடுங்கள்.
4. தூங்கப்போகும் முன்பு பிள்ளைகளுக்குக் கதைகள் சொல்லுங்கள்.
5. வேலைமுடிந்து வீட்டிற்கு வந்தபிறகு - தொலைபேசி/செல்போனில் நேரத்தைக் கழிக்காதீர்கள்.
6. பிள்ளைகளின் முன்னால் சண்டைப் போடாதீர்கள். அசிங்கமான வார்த்தைகளை பேசாதீர்கள்.
7. பள்ளிக்கூடங்கள் சிறைச்சாலைகளாக மாறாமல் கவனித்துக் கொள்ளுகள்.
8. படிப்பில் அக்கறை கொள்ளுங்கள், உங்கள் எண்ணங்களை, ஆசைகளை திணிக்காதீர்கள்.
9. கணவன்-மனைவி உறவுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
10. பிள்ளைகளை அடிக்கடி வெளியே அழைத்துச் செல்லுங்கள்.
11. பிறரின் முன்னிலையில் திட்டாதீர்கள், அடிக்காதீர்கள் - மாறாகப் பாராட்டுங்கள்.
12. கேட்பதை வாங்கிக்கொடுத்துவிட்டு வசைப்பாடாதீர்கள்.
13. பிள்ளைகளிடம் நண்பர்களாக இருங்கள்.
14. எதிர் - பால் உறவுகள் புனிதப்பட உதவுங்கள்.
15. பாராட்டுங்கள், பரிசளியுங்கள், வாழ்த்துங்கள், வாய்ப்பளியுங்கள்.

**பிள்ளைகள் திறமையுள்ளவர்களாக வளர்வார்கள்.**
**தற்கொலை எண்ணங்களைத் தவிர்ப்பார்கள்.**

## தற்கொலை எண்ணங்களை தவிர்த்திட சில வழிகள்

### 1. உன் திட்டத்தை தள்ளி வை

தற்கொலை எண்ணம் உருவானால் உடனடியாக முடிவெடுக்காதே. காலம் பிரச்சனை களுக்கு தீர்வாகும் என நம்பு. முதலில், 48 மணி நேரம் கழித்துப் பார்க்கலாம் என்று உனக்குள் சொல். முடிவினைத் தள்ளிப்போடுவது மிகவும் நல்லது. நாளை பார்க்கலாம், அடுத்த வாரம் பார்க்கலாம் என்று யோசனை செய்திட நேரம் கொடு.

### 2. ஆற்றுப்படுத்தல் (Counselling) பயிற்சி பெற்றவரின் உதவியை நாடு

தற்கொலை எண்ணங்களைத் தனியாக சந்திக்க வேண்டிய தேவையில்லை. “ஆற்றுப்படுத்தும் வல்லுநர்கள்” உண்டு. அவர்களைத் தொடர்பு கொண்டு பேசு. கிராமத்தில் அப்படி யாரையும் உனக்கு தெரியவில்லையா - உன்னுடைய ஆசிரியரிடம் பேசு. ஊரில் இருக்கும் பெரியவர் ஒருவரிடம் பேசு.



### 3. நண்பனோடு தொடர்பு கொள்

உனக்குப் பிடித்த, உன்னைப் புரிந்து கொள்ளும் நண்பர்களுடன் பேசு. அவனோடு / அவளோடு சேர்ந்து எங்காவது போ, சினிமாவுக்கு போ, ஹோட்டல் போ.

### 4. நீ விரும்பும் காரியங்களைச் செய்

பாடு, ஆடு, ஆற்றில் குளிக்கப் போ. உனக்கு என்னப் பிடிக்குமோ அதை செய். சமைக்கப் பிடிக்குமா? சமைத்துச் சாப்பிடு. புத்தகம் வாசிக்கப் பிடிக்குமா- வாசி. நட, மலையேறு.

### 5. தற்கொலை எண்ணங்களிலிருந்து விடுபட முயற்சி செய்


- நண்பனைக் கூப்பிடு, பேசு
- சொந்த பந்தங்களின் வீட்டுக்குப் போ
- கோயிலுக்குப் போ

**வேண்டாம் தற்கொலை!**
**தன்னம்பிக்கை கொள்!**
**மகிழ்ச்சியுடன் வாழ முடியும்!**
**நினைத்ததை சாதிக்க முடியும்!**
**மறவாதே!**





தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வரப்படும் பழக்கம் என்பதற்காகவோ, நம் முன்னோர்கள் சொல்லி வைத்து விட்டார்கள் என்பதற்காகவோ எந்த ஒரு கருத்தையும் நாம் சிந்தித்து தெளிவு பெறாமல் ஏற்றுக்கொள்ளக் கூடாது - புத்தர்



# முத்துலட்சுமி ரெட்டி

## இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்

முத்துலட்சுமி அம்மையாரின் சொந்த ஊர் புதுக்கோட்டை. இவர் 1886-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 30-ம் நாள் நாராயணசாமி - சந்திரம்மா தம்பதியினருக்கு பெண்கள் அடிமைகளாக, புழு பூச்சிகளாகக் கருதப்பட்ட காலத்தில் புதுமைப் பெண்ணாகப் பிறந்தார்.



தொடக்கக் கல்வியை திண்ணைப் பள்ளியில் தொடங்கினாலும், 1902-ம் ஆண்டு 10-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பெற்றோர் திருமணம் செய்து வைக்க விரும்பினாலும், முத்துலட்சுமி கல்லூரியில் சேர்ந்து படித்துத் தான் ஒரு பட்டதாரியாக வேண்டும் என்றே விரும்பினார். ஆனால் அவரின் தந்தையோ தனது ஓய்வூதியத்தில் மேற்கொண்டு அவரைப் படிக்க வைக்கும் நிலையில் இல்லை. அதோடு புதுக்கோட்டையில் ஆண்கள் படிக்கும் கல்லூரியே இருந்தது.

முத்துலட்சுமியின் நிலையை அறிந்த புதுக்கோட்டை மகாராஜா மார்த்தாண்ட வைரவத் தொண்டைமான் முத்து லட்சுமியை ஆண்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆணை பிறப்பித்தார். இதன்மூலம் ஆண்கள் கல்லூரியில் படித்த ஒரே பெண் முத்துலட்சுமி ஆவார். முத்துலட்சுமியுடன் படித்த மாணவர்களில் ஒருவர் சத்தியமூர்த்தி அய்யர் என்பது குறிப்பிடத் தக்கது.

கல்லூரியில் இண்டர்மீடியட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றார். மீண்டும் அவருடைய பெற்றோர் அவருக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினர். அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

தந்தையின் நண்பர் ஒருவர் முத்துலட்சுமியை மருத்துவம் படிக்க அறிவுறுத்தினார். அதன்படி 1907-ம் ஆண்டு முத்துலட்சுமி சென்னைக்கு அழைத்து வரப்பட்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். புதுக்கோட்டை மகாராஜா பொருளுதவி செய்தார். அந்தக் காலத்தில் மாணவர்கள் தங்கிப் படிக்க விடுதிகள் இல்லை. எனவே தந்தையின் நண்பர் பி.எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவர் முத்துலட்சுமி தங்கிப்படிக்கத் தன் வீட்டுப் பக்கத்தில் ஒரு வீட்டை ஏற்பாடு செய்து தந்ததோடு முத்துலட்சுமிக்கு ஆதரவாக இருந்தார்.

1912-ம் ஆண்டு முத்துலட்சுமி மருத்துவத் தேர்வில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்று இந்தியாவில் முதல் பெண் மருத்துவர் என்ற பெருமையைப் பெற்றார். அதோடு அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் சேர்ந்து பணியாற்றினார்.


மருத்துவராகப் பணியாற்றும்போதே, சரோஜினி நாயுடு, அன்னி பெசன்ட் அம்மையார், சுப்ரமணிய பாரதியார் ஆகியவர்களுடன் பழகும் வாய்ப்பு அம்மையாருக்கு ஏற்பட்டது.

டாக்டர் முத்துலட்சுமியைப்போல் 1913-ம் ஆண்டு இந்தியாவின் முதல் ........ பட்டம் பெற்ற டாக்டர். டி. சுந்தரரெட்டி என்பவரை மூடநம்பிக்கைகள், அர்த்தமற்ற சடங்குகள் ஆகியவற்றைத் தவிர்த்து திருமணங்களை நடத்தி வந்த பிரம்மஞான சபையில் 1914-ம் ஆண்டு உங்களுக்கு சமமான மரியாதையை எனக்கு நீங்கள் தரவேண்டும். என்னுடைய விருப்பங்கள் எதுவானாலும் அதற்கு நீங்கள் குறுக்கே நிற்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் திருமணம் செய்து கொண்டார். அப்போது அவருக்கு வயது 28.


கணவன் மனைவி இருவரும் மருத்துவப் பணியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். மருத்துவராகப் பணியாற்றும்போதே ஆதரவற்ற பெண்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் பாடுப்பட்டார். குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் கொண்டு வர காரணமாகத் திகழ்ந்தார். இதனை சாரதா சட்டம் என்று அழைப்பர்.

நீதிக்கட்சியின் தலைவரும், சென்னை மாகாண முதல்வருமான பனகல் அரசர், டாக்டர் முத்துலட்சுமியை மேற்படிப்பு படிக்க இலண்டன் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தந்தார். டாக்டர் முத்துலட்சுமி கணவர் மற்றும் குழந்தைகளுடன் இலண்டன் சென்றார்.

இங்கிலாந்தில் இருக்கும்போது 1926-ம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரீசில் அகில உலகப் பெண்கள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் இந்திய நாட்டின் பிரதிநிதியாக முத்துலட்சுமி கலந்து கொண்டு உரையாற்றினார். அவரின் உரையில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் முன்னேற வேண்டும். பெண்களை அடிமைகளாக நடத்தும் வழக்கம் ஒழிய வேண்டும் என்று வலியுறுத்தினார்.



1926-ம் ஆண்டு பெண்களும் தேர்தலில் போட்டியிடலாம் என்று சட்டம் இயற்றப்பட்டது. அதனால் மாகாண ஆளுநர் டாக்டர் முத்துலட்சுமியை சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக நியமனம் செய்தார். இதன்மூலம் சட்டமன்றத்துக்கு



முதலில் தேவையானதைச் செய், பிறகு உன்னால் இயன்றதைச்செய்... அப்போது நீ உணர்வாய் உன்னால் முடியாததையும் செய்ய முடியும் என்று! - பிரான்சிஸ் அசிசி



தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் என்ற பெருமையை பெற்றார். பின்னர் சட்ட மன்றத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவில் இப்பதவியை வகித்த முதல் பெண்ணும் இவரே.

இவர் பதவியில் இருந்த காலத்தில் பல புரட்சிகரமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக இருதார தடைச் சட்டம், பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டம், பால்ய விவாகத் தடைச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் ஆகியவைகள் ஆகும்.

தேவதாசி முறை ஒழிப்புச் சட்ட மசோதா சட்டமன்றத்தில் கொண்டு வரப் பெரிதும் காரணமாக இருந்தவர்கள் தந்தை பெரியாரும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் ஆவர். மேற்கண்ட மசோதாவைத் தாமதம் செய்வதற்குப் பொது மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்கலாம் என முடிவெடுத்து, அதனை மகாத்மா காந்திக்கும் தந்தை பெரியாருக்கும் அனுப்பி அபிப்பிராயம் கேட்டார்கள். அதனைக் கண்டித்து தந்தை பெரியார் அவர்கள் 23.03.1933-ல் வெளிவந்த குடியரசு இதழில் கீழ்கண்டவாறு பதிவு செய்தார்.

பொது ஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், கோயில்களில் கடவுள்கள் பெயரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி, அவர்களையே பொது மகளிராக்கி, நாட்டில் விபச்சாரித் தனத்திற்கு செல்வாக்கும் மதிப்பும் சமய, சமூக முக்கிய ஸ்தானங்களில் தாராளமாய் இடமும் அளித்து வரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகு காலமாய் இருந்து வருகின்றது. அன்றியும். நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்பிற்கே உரியது என்பதாகி, இயற்கையுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரிகமுள்ள அரசாங்கமாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ கோரின அரசாங்கமாவது ஒன்றிருந்தால், இந்த இழிவான கெட்ட பழக்கம், கடவுள் பேராலும் இருந்து வர ஒரு கண நேரமும் விட்டுக் கொண்டு வந்திருக்காது என்றே சொல்லுவோம்.

நிற்க, இப்போது திருமதி. டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் பொட்டுக் கட்டுவதை ஒழிக்கும் இந்த மசோதாவானது வெகுகாலமாகவே ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக் கூட்டங்களிலும் பொது மாநாடுகளிலும் கண்டித்து பேசப்பட்டிருப்பதுடன், இம்மாதிரி ஒரு சட்டம் செய்ய வேண்டும் என்று இந்தியச் சட்டசபைக் கூட்டங்களிலும் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

ஆகவே, இந்தச் சட்டம் சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டியது மிக்க அவசியமும் யோக்கியமுமான காரியமாகும். ஆனால், அதன்படி நிறைவேற்றப்படாமல் இருக்க, சட்ட மெம்பர் ஆட்சேபனைகளைக் கிளப்பி, இதைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு அனுப்புவது என்னும் பேரால் தாமதப்படுத்திவிட்டது மிகவும் வருந்தத் தக்கதாகும். அதற்கு அனுகூலமாய் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் வோட்டு கொடுத்தது மிகுதியும் மானக்கேடான காரியமாகும். அக்கட்சியாளர்கள் இந்தக் காரியத்தைக்கூடச் செய்ய முடியவில்லையானால், பின் என்ன வேலை செய்யத்தான் அந்தச் சட்டசபையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குப் புலனாகவில்லை. காங்கிரசுக்காரர்கள் சட்டசபையில் இல்லாததால் இச்சட்டம் நிறைவேறாமல் போயிற்று என்று திருமதி. டாக்டர். முத்துலட்சுமி நமக்கு எழுதியிருப்பதைப் பார்க்க, நமக்குத் தாங்கமுடியாத அவமானமாகவே இருந்தது.


எப்படியானாலும் அடுத்த சட்டசபைக் கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேறாமல் போகுமேயானால் சர்க்காரின் யோக்கியத்திலும், ஜஸ்டிஸ் கட்சியாரின் சுய மரியாதையிலும் தெருவில் போகிறவனுக்குக்கூட மதிப்பும் நம்பிக்கையும் இருக்காது என்றே சொல்லுவோம்.

சட்டமன்றத்தில் இதைப்பற்றி விவாதம் நடந்தபோது சத்தியமூர்த்தி தேவதாசி முறையை ஒழிக்கக்கூடாது என்று வாதாடினார். அப்போது முத்துலட்சுமி அம்மையார் எழுந்து, உங்களுக்கு அக்கா தங்கைகள் இல்லையா? பெண்கள் இல்லையா? மனைவி இல்லையா? உங்கள் குடும்பத்தில் எந்தப் பெண்ணையாவது இதுபோன்ற தொழிலுக்கு அனுப்புவீர்களா? என்று கேட்டதும் சட்டசபை ஸ்தம்பித்து நின்று விட்டது. 1930-ல் தொடங்கிய தேவதாசி முறை ஒழிப்புப் போராட்டம் 1947-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ம் நாள் சென்னை சட்டமன்றத்தில் சட்டமாக்கப்பட்டு இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

1930-ம் ஆண்டு மே திங்களில் இரண்டாவது சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. அதில் பெண்கள் மாநாட்டிற்கு டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் தலைமை தாங்கி ஆற்றிய உரை பெரியாரின் பாராட்டைப் பெற்றது.

1933-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நிர்மாண ஊழியர்கள் மாநாட்டில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் ஆற்றிய உரை காந்தி அவர்களைப் பெரிதும் கவர்ந்தது.


1937 முதல் 1939 வரை சென்னை மாநாகராட்சியில் நியமன உறுப்பினராக அம்மையார் பதவி வகித்து சென்னை நகரின் மேம்பாட்டிற்குப் பாடுபட்டார்.




1935-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது புற்றுநோய்க்குச் சிகிச்சை அளிக்க தனி மருத்துவமனை உருவாக்க வேண்டும் என ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.



யாரும் அனைத்திலும் சிறந்தவர்கள் அல்ல. அனுகூலங்களும் (advantage), பிரதிகூலங்களும் (disadvantage) பல வடிவங்களில் வருகின்றது! – சார்லஸ் ச்வெப்



இருந்தாலும் அவருடைய கனவு அவரின் பெரும் முயற்சியால் 1952-ம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை அடையாரில் புற்றுநோய் மருத்துவமனைக்கு அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு அடிக்கல் நாட்டினார். 1954-ம் ஆண்டு ஜுன் திங்கள் 18-ம் நாள் 12 படுக்கைகளுடன் மருத்துவமனை செயல்படத் தொடங்கியது. தற்போது 423 படுக்கைகள் கொண்ட மிகப் பெரிய மருத்துவமனையாக செயல்படுகிறது. அதில் 297 படுக்கைகள் ஏழைகளுக்கு இலவசமாகச் சிகிச்சையளிக்க ஒதுக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 1,25,000 நோயாளிகள் தமிழகம் மட்டுமின்றி தென் மாநிலங்களிலிருந்தும் வருகைதந்து சிகிச்சை பெறுகின்றனர்.

டாக்டர் முத்துலட்சுமியின் தொண்டைப் பாராட்டும் வகையில் அவருக்கு மத்திய அரசு பத்மபூஷன் விருதை வழங்கிச் சிறப்பித்தது.

தமிழக அரசு அவரின் நினைவாக டாக்டர் முத்துலட்சுமி நினைவு கலப்பு மண நிதி உதவித் திட்டம் என்ற பெயரில் கலப்பு மணம் செய்துகொண்ட தம்பதியினருக்கு ரூ. 20,000/- வரை வழங்கி வருகிறது.

டாக்டர் முத்துலட்சுமியின் மூத்த மகன் இராம்மோகன் திட்டக்குழு உறுப்பினராகப் பணியாற்றினார். அவரின் இரண்டாவது மகன் கிருஷ்ணமூர்த்தி பெற்றோரைப் போல மருத்துவராக - புற்றுநோய் சிகிச்சை நிபுணராக அடையாறு புற்றுநோய் மருத்துவமனையைப் பார்த்துக் கொண்டார்.

டாக்டர் முத்துலட்சுமியின் தந்தை நாராயணசாமி பிராமண வகுப்பைச் சார்ந்தவர். அவரின் தாயார் சந்திரம்மா இசை வேளாளர் வகுப்பைச் சார்ந்தவர் (தேவதாசி) என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் முத்துலட்சுமியின் தந்தை நடிகர் ஜெமினி கணேசனின் பெரிய மாமா ஆவார்.

1952-ம் ஆண்டு இராஜாஜி அவர்கள் அம்மையாரைச் சென்னை சட்டமன்றத்தில் உறுப்பினராக மீண்டும் பணியாற்ற அழைத்தார். அம்மையாரே தனக்கு 67 வயது ஆகிறது. எனவே வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டார்.

பல சாதனைகள் புரிந்து, சரித்திரம் படைத்து புகழ்பெற்ற டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் 1968-ம் ஆண்டு ஜுலை மாதம் 22-ம் நாள் தனது 82-வது வயதில் மனநிறைவோடு இறுதி மூச்சை நிறுத்திக் கொண்டார்.

அவர் மறைந்துவிட்டாலும் அவருடைய தொண்டுகளை நினைவூட்டும் நினைவுச் சின்னங்களாக அவ்வை இல்லமும், அடையார் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையமும் விளங்கி வருகின்றன.





## கனவு இதழின் சொந்தக்காரர்கள் இவர்கள்

**DREAM Quarterly Magazine - PATRONS 2017**

| Sl. No. | Name | Place |
|---|---|---|
| 01 | Mr. Antony Balmin Jose G | Vattakarai, KK Dist |
| 02 | Mr. Arasan S. Ponnraj | Nagarcoil, KK Dist |
| 03 | Mr. Arun Prasath C | K K Nagar, Trichy |
| 04 | Mr. Benti Cruz A.S | Toronto, Canada |
| 05 | Mr. Britto J Sagayanagar, | KK Dist |
| 06 | Ms. Chandra | Nilakottai |
| 07 | Mr. Daniel Gunanidhi | Thiruvannamalai |
| 08 | Mr. Durai Raj | M.P.K Secretary, ROSED, Musari |
| 09 | Ms. H. Esther Rani | Tirukoilur |
| 10 | Mr. C. Elumalai | Tiruvannamalaiist |
| 11 | Ms. Helen Viji | Palliyadi, KK Dist |
| 12 | Ms. Jasmine Rani K | Maravankudieruppu, KK Dist |
| 13 | Mr. John Bennet P | Nagarcoil, KK Dist |
| 14 | Mr. John Densingh C Conam | Palliadi, KK Dist |
| 15 | Mr. Knox JR | Maravankudieruppu, KK Dist |
| 16 | Fr. Leon Henson S | Christu Nagar, Nagercoil, KK Dist |
| 17 | Mr. Louis A Sahayam | Maravankudieruppu, KK Dist |
| 18 | Mr. K. Murali | Kumbakonam |
| 19 | Mr. Muthu Krishnan | Karaikkal |
| 20 | M/s. Nila Studio | Palliady, KK Dist |
| 21 | Mr. Oswald Quintal | Ponmalaipatti, Trichy |
| 22 | Dr. Paul. C.J | Kerala |
| 23 | Lr. A. Lawrence Peter Shaw | Mel Ramanputhur, KK Dist |
| 24 | Mr. Prakash JK Kurusadi, | Nagercoil, KK Dist |
| 25 | Fr. Robinson J | Kuzhithurai Diocese, KK Dist |
| 26 | Ms. Selva Saroja | Palliyady, KK Dist |
| 27 | Ms. Shekina Evelin C | Cuddalore |
| 28 | St. Aloysius Hr. Sec. School | Christu Nagar, Nagercoil, KK Dist |
| 29 | Ms. Susannah Mary D | Maravankudieruppu, KK Dist |
| 30 | Mr. Thomaiyar. G | K.K. Nagar, Trichy |
| 31 | Mr. Thomas Xavier J.R | Maravankudieruppu, KK Dist |
| 32 | Mr. Vidya Sagar. J | Thiruvannamalai |
| 33 | Ms. Vijila A.S | Mulagumoodu, KK Dis |

**கனவு இதழ்**
**உங்களை நெஞ்சார வாழ்த்துகின்றது.**
**உங்களின்அர்ப்பணிப்பு அளவிடற்கரியது!**
**கடினமான உழைப்பிலிருந்து உதவுகின்றீர்கள்!**
**உங்களால் இளைய சமுதாயம்**
**நிச்சயமாக மேன்மை பெறும்.**
**உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும்**
**எங்கள் நன்றிகள் பல...!**



உனக்கு ஊனம் இருந்தால் கடினமாக உழைத்திடு. என்ன செய்ய வேண்டுமோ அதை செய்திடு. ஆனால் அடுத்தவர்களை இழிவாக நோக்காதே - லாரன் போட்டர்








# ஹென்றி டியூனண்ட்

## Henry Dunant

மே 08–ம் தேதி – உலக செஞ்சிலுவை – செம்பிறை **(World Red Cross and Red Crescent Day)** தினமாகும். உலகில் யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பாதிப்படைவோருக்கு மனிதாபிமான நோக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகிய சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் என்பன பெயரில் ஒரு வித்தியாசத்தைக் காட்டி நின்றாலும்கூட அடிப்படையில் இரண்டு அமைப்புகளும் ஒரே நோக்கத்தை முன்னெடுப்பவைகளே. குறிப்பாக அரபுலக நாடுகளில் சிலுவை எனும் குறியீட்டுக்கும், வார்த்தைப் பதத்திற்கும் பதிலாக பிறை எனும் குறியீடும், வேறு வார்த்தைப் பதமும் பயன்படுத்தப்படுகிறது.

உலக செஞ்சிலுவை – செம்பிறை தினத்தின் பிரதான கருப்பொருள்: யுத்தங்களினாலும் அர்த்தங்களினாலும் பாதிப்புறும் மக்களுக்கு இன, மத, மொழி பேதமின்றி உதவி செய்வதும், முரண்பாடுகள் மிக்க தரப்பினரிடையே நடுநிலை வகித்து சமாதானத்திற்கு உதவுவதுமாகும். இச்சங்கத்தின் ஸ்தாபகரான ஜீன் ஹென்றி டியூனண்ட் பிறந்த தினமான மே மாதம் 8ம் தேதி, அம்மனிதாபிமான மிக்க மனிதப் புனிதரைக் கௌரவிக்க இத்தினத்திற்கு உலக செஞ்சிலுவை சங்க தினமாக உலகத்தோர் கடைபிடித்து வருகின்றனர்..

ஜெனீவாவில் பக்தியும் கருணையும் குடிகொண்டிருந்த குடும்பமொன்றில் 1828–ம் ஆண்டு மே மாதம் 8–ம் தேதி ஹென்றி டியூனன்ட் பிறந்தார். தனது பெற்றோரிடமிருந்து கற்ற அனுபவங்கள் காரணமாக சிறுபிராயத்திலிருந்தே சமூக சேவைகளில் ஆர்வமிக்கவராக விளங்கினார். சிறிய வயதிலேயே பிறர் படும் இன்னல் கண்டு வேதனையுற்றார். சிறைக்கைதிகள் அனுபவிக்கும் கடும் தண்டனைகளுக்காக மனம் வருந்தினார்.

சிறைக்கூடங்களுக்குச் சென்று கைதிகளுக்கு ஆறுதல் கூறி வந்தார். பின்னர் வங்கித் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கையில் முன்னேறினார்.

1859 ஜுன் 25–ல் அவர் வட இத்தாலிக்கு சென்றபோது அங்கு சோல்பரினோ யுத்தம் நடைபெற்றிருந்தது. ஆஸ்திரிய, பிரான்ஸிய, இத்தாலிய படைகளின் 3 லட்சம் பேர் 16 மணி நேரங்கள் போரிட்டத்தின் விளைவாக 40,000 பேர் போர்க்களத்தில் குற்றுயிராக் கிடந்தனர்.


இவ்வாறு குற்றுயிராய்க் கிடந்தவர்களிடம் எத்தரப்பினரும் அக்கறை காட்டவில்லை. இந்தக் காட்சி டியூனண்ட்டின் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை தோற்றுவித்தது. ஊரார் உதவியுடன் காயம்பட்டோருக்கு எத்தகைய பேதங்களுமின்றி சிகிச்சையளித்தார். பகை நிரம்பிய அச்சூழலில் இவரது பணி புரட்சிகரமானதாக அமைந்தது.

பின்பு ஜெனீவா திரும்பிய டியூனண்ட் சோல்பரினோ நினைவுகள் என்ற நூலை எழுதினார். இந்நூலில் அவர் மனித சமுதாயத்திற்கு உதவக்கூடிய அறிவுரைகளை வழங்கினார். இந்நிகழ்வினையடுத்து நாடு நாடாகச் சென்று யுத்தக்களப் பணிகள் பற்றிய அவசியத்தை எடுத்துரைத்தார். பிற்காலத்தில் வறுமையின் பிடியில் அவர் சிக்கினாலும் நோபல் பரிசுக்குரியவரானார்.

1910 அக்டோர் 30ல் உயிர்நீத்த ஹென்றி டியூனண்ட் அவர்களின் பிறந்த நாளான (மே 8, 1828) 1948ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு நாளாக அங்கீகரிக்கப்படடது. 1863–ல் போர் நிவாரணப் பணிகளில் ஈடபட்ட தொண்டர்களை இனங்காட்டுவதற்காக வெள்ளைப் பின்னணியில் செஞ்சிலுவைச் சின்னம் தெரிவு செய்யப்பட்டது.



ஒரு திட்டம், ஒரு நோக்கம் – ஒவ்வொரு வாழ்வுக்கும் ஒரு மதிப்பைக் கொடுக்கின்றது, மாறாக நாம் பிறந்த இடமோ, பாலினமோ அல்லது இயலாமையோ அல்ல –ஷாரன் ஆங்கிள்





1864-ல் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான சட்டங்களே ஜெனீவா சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஒவ்வொரு மனிதனையும் அவரின் பெருந்தன்மைகளையும் கௌரவிக்கவே ஜெனீவா உடன்படிக்கையும் ஏற்படுத்தப்பட்டது.

இதில் தரையில் காயமடைந்த அல்லது நோய்வாய்ப் பட்ட அல்லது கப்பல் உடைந்ததால் பாதிக்கப்பட்ட ஆயுதம் தரித்தோரைக் காப்பாற்றல், யுத்தக் கைதிகளை பாதுகாத்தல், பொதுமக்களை காத்தல், சர்வதேச ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டோரை பாதுகாத்ததில் என்பன ஜெனீவா சாசனத்தில் காணப்படுகிறது.

முதலாம் உலகப்போரின் பின்னர் சமாதானத்துக்கான தேவை உணரப்படுகிறது. செக்கோஸ்லோவாக்கியாவில் சமாதானத்தை வலியுறுத்தி 1922-ல் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடப்பட்டது. இதுவே பின்னர் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாளாக அனுசரிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

1934-ம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற செஞ்சிலுவை சங்கத்தினரின் 15-வது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இருப்பினும் 1948-ம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவை சங்கத்தை ஆரம்பித்தவரான டியூனண்ட் அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கொண்டாடும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முதலில் இந்நாள் செஞ்சிலுவை சங்க நாள் என்றே அழைக்கப்பட்டது. எனினும் பின்னர் பல மாற்றங்களுக்கு உள்ளாகி 1984-ல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் என்று அழைக்கப்படுகிறது. செஞ்சிலுவை, செம்பிறை இயக்கம் உலகிலேயே மிக விரிவாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகளில் ஒன்றாகும். செஞ்சிலுவை கிறிஸ்தவ சமயத்தை பிரதிபலிப்பது போல அமைந்துள்ளமையினால் இஸ்லாமிய நாடுகளில் அதன் சின்னம் செம்பிறையாகக் கொள்ளப்பட்டது.

ஆரம்பத்தில் யுத்தங்களினால் காயமுற்ற மக்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பின் செயற்பாடுகள் தற்போது விரிவடைந்துள்ளன.

செஞ்சிலுவை, செம்பிறை இயக்கம் ஏழு பிரதான கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.




01. மனிதாபிமானம்
02. பாரபட்சமின்மை
03. நடுநிலைமை
04. சுதந்திரத் தன்மை
05. தொண்டு புரிதல்
06. ஒற்றுமை
07. சர்வ வியாபகத் தன்மை என்பவைகளே அவை.




யுத்தத்தினாலும் இயற்கை சீற்றங்களினாலும் பாதிப்புறும் மக்களுக்கு இன, மத, மொழி, பிரதேச பேதமின்றி இவ்வியக்கம் அன்புக்கரம் நீட்டி உதவுகின்றது. முரண்பாடுகளில் ஈடுபட்டிரக்கும் எத்தரப்பினரையும் சாராது, அரசியல் வேறுபாடுகளில் அக்கறை காட்டாது, நடுநிலைமையுடனும், சுதந்திரத்துடனும் இது செயற்படடு வருகின்றது. அதேவேளையில் அந்தந்த நாடுகளின் சட்டத்துக்கு உட்பட்டே செயலாற்றுகின்றது. ●






டாக்டரிடம் போய் டாக்டர் என் விரல்கள் வீங்கியிருக்கு என்கிறோம். அவரும் பரிசோதித்து விட்டு சிகிச்சை செய்கின்றார். எதைவைத்து நம்முடைய விரல்கள் வீங்கியிருக்கிறது என்கிற முடிவிற்கு நாம் வருகின்றோம். ஒருவரின் உயரம், உடல் எடை, வயது இவைகளை பொறுத்து கைவிரல்கள் அமைகின்றன. அவற்றில் சிறிதளவு வேறுபாடு தெரிந்தாலும் நாம் கண்டுபிடித்து விடுகின்றோம். அதேபோல் குழந்தைகளின் விரல்கள் சிறுத்து காணப்பட்டாலும் நாம் கண்டுபிடித்து விடுகின்றோம்.

விரல்கள் சிறுத்தாலும் ஆபத்து, பெருத்தாலும் ஆபத்து. உடலுக்கு ஏற்ப விரல்கள் அமைய வேண்டும். சிறுத்து போவதற்கு காரணங்கள் பல இருக்கலாம். நோய், வறுமை, பட்டினி போன்றவைகள். பருத்து இருப்பதற்கும் காரணங்கள் பல உண்டு. நோய், அதிக உணவு, உடல் பயிற்சி இல்லாமை போன்றவைகள்.

இதை மனதில் கொண்டு நமது முன்னோர்கள் நமக்கு ஒரு பழமொழியை விட்டுச் சென்றுள்ளார்கள்.



# விரலுக்கு ஏத்த வீக்கம்


மூன்றே வார்த்தைகளில் வாழ்க்கையின் அஸ்திவாரத்தையே போட்டுவிட்டார்கள். அந்த மூன்று வார்த்தைகளும் நமக்கு மூன்று வாழ்க்கை நெறிகளை சொல்கின்றன.

**1. வருமானத்திற்கு ஏற்ப செலவு**

**2. திறமைக்கு ஏற்ப வேலை**

**3. நிஜத்திற்கு ஏற்ப கனவு**

இந்த நெறிகளை அலசி ஆராய்ந்து கடைபிடிப்போமானால் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும், பிரகாசமானதாக அமைந்திடும்.



## 1 வருமானத்திற்கு ஏற்ப செலவு

விரலுக்கு ஏத்த வீக்கம் – நமக்கு பொருளாதார திட்டமிடலை, பொருளாதார திட்டமிடலின் அடிப்படையை மூன்றே வார்த்தைகளில் சொல்லியுள்ளது.

தனி நபர் – பொருளாதார திட்டமென்றாலும், குடும்ப – பொருளாதார திட்டமென்றாலும், நாட்டின் – பொருளாதார திட்டமென்றாலும் – அடிப்படை விரலுக்கு ஏத்த வீக்கம். அதாவது வருமானத்திற்கு ஏற்ப செலவு.



இந்த அடிப்படை தத்துவத்திலிருந்து தவறும்போது தனி நபரும் தவறிழைக்கின்றார், ஏன் ஒரு தேசமும் தவறு செய்கிறது. வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் செலவு செய்பவன் **அரசனாக இருந்தாலும் ஆண்டியாவான்** என்பது உறுதி.

**வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் நம்மை செலவு செய்யத் தூண்டும் காரணிகள்என்ன?**

### ❧ போலியான சமூக அந்தஸ்து False Social Status

ஒவ்வொருவருக்கும் சமூகத்தில் அந்தஸ்து தேவை. ஆனால் அது போலியானதாகவோ, பிறரிடம் கேட்டுப் பெறப்பட்டதாகவோ இருக்கக்கூடாது. சமூக அந்தஸ்து பணத்தை விரயம் செய்வதாகவோ அல்லது வருமானம் தாண்டி செலவு செய்வதாகவோ உருவாகுவதில்லை. (உ–ம்) மகளுக்குத் திருமணம். வாக்குறுதிகளை அள்ளித் தெளித்து விட்டீர்கள். இப்போது விழி பிதுங்கி நிற்கின்றீர்கள். 5000 பத்திரிக்கைகள் கொடுத்துள்ளீர்கள். ஊரே உங்களை மெச்ச வேண்டும் என்று ஊரெல்லாம் கடன் வாங்கியாவிட்டது. திருமணம் நல்லபடியாக முடிந்து விட்டது. மகள் கணவருடன் சென்றுவிட்டாள். கடன் கொடுத்தவர்கள் ஒருவர் ஒருவராக வர ஆரம்பித்துவிட்டனர். எதிர்பார்த்த அளவிற்கு மொய் பணமும் வரவில்லை.


இதைத்தான் நம்முடைய முன்னோர்கள் விரலுக்கு ஏத்த வீக்கம் என்று சொல்லி வைத்தார்கள். ஒருநாள் பெருமைக்காக இன்று வாழ்நாள் முழுக்க கடன்பட்டு கிடக்கின்றீர்களே? இது தேவை தானா?



எனக்கு 100 பேரை தான் அழைக்க முடியும். இவ்வளவு தான் செய்திட முடியும் என்று சொல்லியிருந்தால் இப்போது தலை நிமிர்ந்து நின்று இருக்கலாம்.



நாம் நம்முடைய வரம்புகளை அறிந்திருந்தால், அவைகளைத் தாண்டியும் பயணிக்க முடியும் – பிரெஞ்சு பழமொழி






## ❧ திட்டமிடத் தெரியாமை Lack of planning skills

வரவு , செலவு திட்டம் தீட்டுவதற்காகத்தான் மாநிலத்திலும் மத்தியிலும் நிதியமைச்சர்கள் உள்ளனர். திட்டமிடுவது ஒரு கலை. ஒருவன் என்னுடைய வருமானம் இவ்வளவுதான் – இதற்குள் நான் நின்றிட வேண்டும் என எப்போது கருதுகின்றானோ அப்போது அவன் திட்டமிட ஆரம்பிக்கின்றான்.

சிலர் இவ்வாறு திட்டமிடுகின்றனர்

| வருமானம் | தவிர்க்க இயலாத செலவுகள் (உ–ம்) மின்சார பில், வீட்டுக்கடன் | அவசியமான செலவுகள் (உ–ம்) உணவு, காய்கறி, மருத்துவம் | ஆசை செலவுகள் (உ–ம்) உறவினர் வீடு செல்வது, சுற்றுலா, கார் | சேமிப்பு (உ–ம்) எல்.ஐ.சி. தங்க நகை |
|---|---|---|---|---|
| | | | | |

நிதி திரட்டும்போது நீங்கள் மட்டும் திட்டமிட்டால் போதாது. குடும்பத்தில் அந்நிதியினால் பயன்பெறப் போகும் அனைவரும் அதில் கலந்துகொள்ள வேண்டும். சிலர் முதலில் சேமிப்புக்கு என்று குறிப்பிட்டத் தொகையை ஒதுக்கி விடுகின்றனர். நிதி திட்டமிடுதலில் இன்னொரு அம்சம் நிதி பெருக்குதல். நிதியை பெருக்குவதில் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் பங்கு உண்டு என்பதினை மறந்து விடக் கூடாது.

நிதி – திட்டமிடல் இல்லாத குடும்பங்களில் கீழ்காணும் வசனங்களைக் கேட்கலாம்.

- பத்து காசு சம்பாதிக்க வக்கு இல்லை
- உங்களைக் கட்டிக்கிட்டு என்ன சந்தோஷத்தை கண்டேன்
- உங்க அப்பனிடம் கேட்க வேண்டியதுதானே
- வாங்கின காசத்தர துப்பில்ல, இவனெல்லாம்




நம்மில் பலருக்கும் கடன் வாங்குவது ஒரு கலை. அங்க வாங்கி இங்க கொடுப்பது. நம்முடைய ஊர் பாஷையில் அத மறிப்பது என்கின்றோம்.

அதே நேரத்தில் நம்முடைய மனதில் இன்னொரு கேள்வியும் எழலாம். கடனே வாங்கக்கூடாதா? கடன் வாங்குவது தவறா?

கடன் வாங்குதல் தன்னிலே சரியும் அல்ல, தவறும் அல்ல. எதற்காக கடன் வாங்குகிறோம் என்பதில்தான் அதனுடைய ஏற்புத் தன்மை அடங்கியுள்ளது.

விரலுக்கு ஏத்த வீக்கம் – இன்னொரு அர்த்தத்தையும் நமக்குக் கொடுக்கின்றது.

விரல் – அதன் பருமனில் மட்டுமே இருக்க வேண்டும்! பெருத்தாலும், சிறுத்தாலும் அது மோசம்!

அதுபோல் அளவிற்கு அதிகமாக செலவழிப்பதும், தேவைக்குக் கூட செலவழிக்காமல் இருப்பதும் மோசமான விளைவுகளையே உருவாக்கும்.

## 2 திறமைக்கு ஏற்ப வேலை




விரலுக்கு ஏத்த வீக்கம் நமக்கு சொல்லித் தரும் இன்னொரு பாடம் – திறமைக்கு ஏற்ப வேலை.


திறமை சிறிதளவுமின்றி குறுக்கு வழியில் வேலைக்குச் சேர்ந்த பலர் படுகின்ற பாடுகள் நமக்குத் தெரிந்ததே!

எங்களுடைய அலுவலகத்தில் பணியிடம் ஒன்று உருவானது. திறமையான ஒரு நபரை நியமித்திட விரும்பினார் மேலாளர். அதே நேரத்தில் தனது உறவினர் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதில் இயக்குநர் உறுதியாக இருந்தார். விவாதங்கள் நடந்தன. நேர்முகத் தேர்வு, எழுத்துத் தேர்வு எல்லாம் நடைபெற்றது. இயக்குநரின் எண்ணம் ஈடேறியது.

இயக்குநர் பரிந்துரைத்தவர் அந்தப் பணிக்கு சற்றும் பொருத்தமில்லாதவர். அவருடைய படிப்பு வேறு, அனுபவம் வேறு. மகிழ்வோடு பணியில் சேர்ந்தார். ஆனால் அவரால் அந்த பணிக்கு தேவையான கடமைகளை ஆற்றிட இயலவில்லை. பாதி நாட்கள் வேலைக்கு வருவதில்லை, கேட்பதற்கும் நாதியில்லை. ஒருநாள் மேலாளர் அவரை சஸ்பெண்ட் செய்தார்.

நமக்கு வேலை வேண்டும். இதில் எந்த மாற்றுக் கருத்தும்இல்லை. வேலையிருந்தால்தான் ஊதியம் உண்டு – இதிலும் எந்த மாற்று எண்ணமும் இல்லை.

அதே நேரத்தில் நமது எண்ணங்களுக்கும், சிந்தனைக்கும், திறமைக்கும் பொருந்தாத வேலைகளில் நம்மை இணைத்துக் கொள்வதால் நமக்கு மட்டும் கஷ்டம் இல்லை – மாறாக அந்த வேலையுடன் தொடர்புடைய அனைவருக்கும் கஷ்டம், ஏன் நஷ்டமும் கூட.





விரலுக்கு ஏத்த வீக்கம் நமது திறமைக்கு ஏத்த வேலை. அப்போதுதான் அந்த வேலையை நாம் முழுவதுமாக காதலிக்க முடியும். அனுபவித்து, ரசித்து, ருசித்து பணியாற்றிட முடியும். நமது திறமைகளை அந்தத் துறையில் மேன்மேலும் வளர்த்திட முடியும்.

நமது தமிழகத்தின் தலைவர்களை எடுத்துக் கொள்வோம். ஆட்சியிலும் அதிகாரத்திலும் உட்கார்ந்திருந்தாலும் அத்தனை பேரும் அந்தப் பணிக்கான திறமையுடைவர்களா? என்றால் இல்லை. பண பலத்தாலும், சாதீய பலத்தினாலும், ஆள் பிடியாலும் பதவிகளை அலங்கரிப்பவர்கள் பலர்.

சிலத் தலைவர்களால் அந்த பதவியே மேன்மை அடைந்திருக்கிறது. காமராஜர் அவர்களால் தமிழக முதன் மந்திரி பதவி பெருமை அடைந்திருக்கிறது என மார்த்தட்டி சொல்லிட முடியும்.

ஒரு பணியில் அமர்வதற்கு முன்பு, அல்லது ஒரு குறிப்பிட்ட பொறுப்பை ஏற்பதற்கு முன்பு எனக்கு அதற்கான தகுதி இருக்கிறதா? அல்லது அந்தத் தகுதிகளை வளர்த்தெடுக்கும் முனைப்பாவது / வாய்ப்புகளாவது உள்ளதா? என்று ஆராய்ந்திடுவது மிகவும் முக்கியம்.

என்ன வேலையென்றாலும் பரவாயில்லை. வேலையிருந்தால் மட்டும் போதும் என்று நினைப்பது மிகவும் தவறு.

திறமைக்கு ஏற்ப வேலைத் தேடுவது ஒரு சுகம். அதை அடைந்திடும் போது கிடைத்திடும் மகிழ்ச்சிக்கு அளவே இருப்பதில்லை.

**So, விரலுக்கு ஏத்த வீக்கம்!**

## 3 நிஜத்திற்கு ஏற்ப கனவு

நம்மை கனவு காண அழைத்தார் மறைந்த மாமேதை டாக்டர் அப்துல் கலாம் அவர்கள். இளையோர்கள் அறிவியல் தொழில் நுட்பம் கொடுத்த டி.வி.யிலும், செல்போனிலும் மயங்கிக் கிடந்த போது, கனவு காண் என்ற அவரது வார்த்தைகள் நம் ஒவ்வொருவரையும் துயில் எழச் செய்தது என்பது நிஜம்.

நமது கிராமத்தில் பகல் கனவு காணாதே – என்பார்கள். டாக்டர் அப்துல் கலாம் கனவு காண் என்கின்றார். இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று முரண்பட்டதா என்றால் என் பதில் இல்லை என்பதே.



கனவு காண் – என அறைக்கூவல் விடுத்த அப்துல் கலாம் அவர்கள் அது நிச்சயமாக நிஜத்திற்கு ஏற்ற கனவாக இருக்க வேண்டும் என்கின்ற உறுதிப்பாட்டை கொண்டிருந்திருப்பார் என்றே நான் கருதுகிறேன்.

ஒரு கூலித் தொழிலாளி, ஒரு ஆசிரியர், ஒரு மாணவன் – அரசியல் தலைவராக மாறிட வேண்டும் எனக் கனவு காண்கின்றனர். இதில் எந்தத் தவறுமில்லை. இது நிஜங்களுக்கு, எதார்த்தங்களுக்கு உட்பட்டது.

அதே கூலித் தொழிலாளி, அதே ஆசிரியர், அதே மாணவன் நான்இந்திய நாட்டின் ஜனாதிபதியாக மாறப் போகிறேன் என்று கனவு கண்டால் எந்த வகையில் இது நியாயமானது. அடிப்படை முகாந்திரமே இல்லை. நிஜங்களோடு பொருந்தவில்லை, எதார்த்தமானதாகவும் இல்லை.

நமக்குத் தெரிந்த கதை ஒன்று உண்டு. அதை இங்க ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**தினமும் ஒருவன் இறைவனிடம் மன்றாடினான். நான் வறுமையில் உள்ளேன். நல்ல உணவு சாப்பிடக் கூட வழியில்லை. பிள்ளைகளுக்கு நல்ல துணிமணிகள் இல்லை. நீங்கள்தான் கருணை காட்ட வேண்டும். எனக்கு உதவ வேண்டும்.**

**நாட்கள் உருண்டோடின. வாழ்க்கையில் எந்த மாற்றமும் ஏற்பட்டதுபோல் தெரியவில்லை. கடவுள்மீது இருந்த நம்பிக்கை கோபமானது. ஒருநாள் கோபத்துடன் கத்தினான். எதாவது செய்து என்னைக் காப்பாற்றும், லாட்டரியில் பரிசாவது விழச் செய்யும். கடவுளுக்கும் கோபம் வந்தது. டேய் முட்டாளே, முதலில் போய் ஒரு லாட்டரி டிக்கெட் வாங்கு என்றாராம்.**

முயன்றுகூட பார்க்க முடியாதவன் இலக்குகளைக் குறித்து கனவு காண்பது வீண். நேர விரயம்!

- 65 வயது கடந்த பெண் உலக அழகி பட்டம் பெற கனவு காண்பதும்
- 45 வயதிற்கு பிறகு இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடக் கனவு காண்பதும்
- கட்சியின் அடிப்படை உறுப்பினர்கூட ஆகாமல் அக்கட்சி வழி ஆட்சியை பிடிக்கக் கனவு காண்பதும்

நிஜங்களுக்குப் புறம்பானது. அதைத்தான் நம் முன்னோர்கள் விரலுக்கு ஏற்ற வீக்கம் என்று சொல்லிக் கொண்டார்கள்.

கனவு காண்பதில் கூட ஒரு நியாயம் இருக்க வேண்டும். ஒரு எதார்த்தம் இருக்க வேண்டும்.


- இளநிலை ஆசிரியர், கல்லூரி விரிவுரையாளராகக் கனவு காணலாம்.
- குப்பனும், சுப்பனும் திரை நட்சத்திரம் ஆக கனவு காணலாம்
- குடிசையில் வாழும் மாலனி ராக்கெட் விஞ்ஞானியாக கனவு காணலாம்.
- நமது ஊர் பாலாஜி அம்பானி போல் வியாபாரம் செய்ய கனவு காணலாம்.

ஏனென்றால் அந்தக் கனவுகளை நனவாக்கிட, அதுநோக்கிப் பயணித்திட முயன்றிடுவதற்கான இடம் நமக்கு இருக்க வேண்டும்.

நண்பர்களே – பழமொழிகள் நம்மை வழிநடத்தும் நெறியாளர்கள். **விரலுக்கு ஏத்த வீக்கம்!**



உன்னால் முடியும் என்று நம்பு, உன் இலக்கின் பாதி தூரத்தைக் கடந்திருப்பாய்
– தியோடர் ரூஸ்வெல்ட் –



கருப்பு

# அப்பா Thanks



‘அப்பா, வண்டிய நிறுத்துங்க, நிறுத்துங்கப்பா!’

வண்டியை நிறுத்த ரமேஷ்க்கு மனசு வரல. ஆனால் நிறுத்தச் சொன்னது தனது பாசத்துக்குரிய 7 வயது மகள் ரத்னா. ஆகவே தனது பைக்கின் வேகத்தைக் குறைத்தான்.

‘அப்பா, நிறுத்துங்க!’

‘அது....!’ அவளுக்கு வார்த்தை வரவில்லை.

எதையோ பார்த்திருக்கிறாள். அதுமட்டும் அவனுக்கு புரிந்தது.

வண்டியை நிறுத்தியபோது, தெருவின் முனைக்கு வந்திருந்தான். இரண்டு தெருக்கள் தள்ளி இவன் வீடு.

பலரும் எட்டிப் பார்த்தார்கள். பார்வையில் ஆயிரம் கேள்விகள் தெரித்தன.

வண்டியை நிறுத்தியவுடன் மான்குட்டியைப் போல துள்ளிக் குதித்து நான்கு வீடுகள் தாண்டி ஓடி, அருகில் இருந்த சிறு பள்ளத்திற்குள் குதித்தாள்.

‘ரத்னா, வாம்மா, போகலாம்!’

‘அப்பா இங்க வாங்க, வேகமா வாங்க... வாங்கப்பா... வந்து பாருங்க...!’

என்ன செய்வதென்றே இவனுக்குப் புரியவில்லை. இது காலனித் தெரு. அந்த தெருவின் பள்ளத்திற்குள் ஆசை மகள் ரத்னா. இவனையும் கூப்பிடுகிறாள். இவன் சாதி சங்கத் தலைவன்.



பள்ளத்திற்குள் அவளுடன் இரண்டு, மூன்று சிறுவர்கள். கையில் ஒரு அழகான நாய்க்குட்டி.

‘அப்பா பாருங்க. இது கால யாரோ உடைச்சுட்டாங்க.’

‘ஆமா, அங்கிள். கொஞ்சமுன்னாடி வேகமான போன பைக்கில் இது அடிப்பட்டிருச்சி’ உரிமையோடு பேசினான் அந்தப் பகுதி பையன்.

‘அப்பா, உங்க கர்ச்சிப்ப தாங்க.’

டாக்டராக மாறினாள் ரத்னா. தன் அண்ணனுக்கு கைமுறிந்தபோது டாக்டர் செய்தவைகளை பக்கத்திலிருந்து பார்த்திருந்தாள்.

‘டேய் முருகா, ஒரு குச்சி ஒடுச்சிட்டு வா.’

அப்பாவிடமிருந்து கர்ச்சிப்பை பிடுங்கி எடுத்துக் கட்டுப் போட ஆரம்பித்தாள்.

அதற்குள் கூட்டம் கூடிவிட்டது. சாதி சங்கத் தலைவன். இவன் எப்படி காலனி வீட்டுக்கு முன் நின்று கொண்டு. பெண்கள் அச்சத்தில் உறைந்திருந்தனர். என்ன பிரச்சினையோ என இதயங்கள் படபடத்தது. போனவாரம் தான் போலீஸ் இவன் தலைமையில் காலனி இளைஞர்களை அடித்து நொறுக்கியது.

‘ஆன்டி இங்க வாங்க...’

உரிமையோடு ஒதுங்கி நின்ற குப்பம்மாளை அழைத்தாள் ரத்னா.

‘என்ன நீங்கதான். தைலம் ஏதாவது இருந்தா எடுத்துட்டு வாங்க...’

மகளின் கரிசனையை பாராட்டவா, சாதிசனம் என்ன சொல்லும் என நினைத்து வருந்துவதா? ஒன்றும் புரியவில்லை ரமேஷ்க்கு.

‘வா, போகலாம்...’


‘சரிப்பா, முருகா பத்திரமா பாத்துக்க. நான் சாயங்காலம் வந்து பார்ப்பேன். சோறு கொடுக்க மறந்திராதே...’

சொல்லிக்கொண்டே பைக்களில் ஏறினாள் ரத்னா.

‘பை முருகா’


‘பை ரத்னா’

பைக் நகன்றது. ‘அப்பா தாங்கஸ்’. சாதித்த மகிழ்வில் தந்தையை இறுகப்பிடித்துக் கொண்டாள் ரத்னா. ●



உன் ஊனத்தினால் எனக்கு உதவி தேவை.
ஆனால் நான் என்னுடைய இயலாமைகளை
மாற்றிட முயற்சித்துள்ளேன்.
முழு வாழ்வு வாழ்கின்றேன்.
உலகத்தைச் சுற்றி வந்துள்ளேன்...
அன்டாட்டிகாவிலிருந்து புவி ஈர்ப்பு விசை இல்லாத
இடத்திற்கும் பயணித்திருக்கிறேன்
*Stephen Hawking*



ஊனம் ஒருவரை வாழ்வின் எந்த அம்சத்திலிரந்தும் தகுதியற்றவராக மாற்றுவதில்லை
– எம்மா தாம்சன் –

# தடைகளை உடல் ஊனங்களை தகர்த்தெறிந்தவர்கள்



## சுதா சந்திரன்

சுதா சந்தின் ஒரு இந்திய பரதநாட்டியக் கலைஞர். இந்திய மொழித் திரைப்படங்களிலும், சின்னத்திரை தொடர்களிலும் நடித்துள்ளார். இவர் 1981-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அருகே ஏற்பட்ட விபத்தொன்றில் வலது காலின் ஒரு பகுதியை இழந்தார். இருப்பினும் நடனக்கலையை கைவிடவில்லை.

விபத்தைத் தொடர்ந்து கால் இல்லாத நிலையில் ஜெய்ப்பூர் செயற்கைக் காலை பொருத்திய பிறகு இவர் தொடர்ந்து நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். ஐரோப்பா, கனடா, மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் நடன நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

1984-ம் ஆண்டு வெளிவந்த மயூரி என்ற தெலுங்கு திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார். 1986-ம் ஆண்டு இந்தத் திரைப்படம் நாச்சே மயூரி என்ற பெயரில் இந்தி மொழியில் ரீமேக் செய்யப்பட்டது. மயூரி திரைப்படத்திற்காக 1986-ம் ஆண்டு தேசிய திரைப்பட விருதுகளில் சிறப்பு ஜூரி விருதை பெற்றுள்ளார்.



## எச். ராமகிருஷ்ணன்

ராமகிருஷ்ணனின் இரண்டு கால்களும் போலியோவினால் பாதிக்கப்பட்டன. அவர் தனது வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் போராட வேண்டியிருந்தது. பள்ளியில் அனுமதி மறுக்கப்பட்ட போது போராடினார். வேலையில் சேருவதற்கு போராடினார். 40 ஆண்டுகள் பத்திரிக்கையாளராகப் பணிபுரிந்து வந்துள்ளார். தற்போது **SS** இசைத் தொலைக்காட்சி சேனலில் **CEO** ஆக இருக்கிறார்.



## அக்பர் கான்

ராஜஸ்தானில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். பிறப்பிலிருந்தே பார்வை குறைபாடுடையவராகப் பிறந்தார். அவரது மூத்த சகோதரரின் ஆதரவோடு மிகச் சிறந்த படிப்புகளை மேற்கொண்டார். இசையில் மிகவும் ஆர்வம் உள்ளவர். கான் ஒரு நீதிபதியாகவும் ஒரு நடிகராகவும் சிறப்புடன் விளங்குகின்றார். 1980-ம் ஆண்டு ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கான தேசிய விருது பெற்றார். கான் எப்போதும் தன்னை நம்பியுள்ளார். கண் பார்வையற்றது ஒரு ஆசீர்வாதம், அது சாபமல்ல என்று குறிப்பிடுகின்றார்.



## அருணிமா சின்கா (Arunima Sinha)

உத்திரப்பிரதேசத்தில் அம்பேத்கர் நகரில் பிறந்த அருணிமா சின்கா கல்லூரியில் பட்ட மேற்படிப்பை முடித்துவிட்டு சட்டத்தையும் படித்தார். தேசிய அளவிலான கைப்பந்து ஆட்ட வீராங்கனையான அருணிமா 2011-ம் ஆண்டில் தொடர் வண்டியில் பயணம் செய்தபோது கொள்ளையர்களால் தாக்கப்பட்டு ஓடும் தொடர்வண்டியிலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்டார். அதன் விளைவாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இவரின் இடது கால் துண்டிக்கப்படடது. 2012-ம் ஆண்டு மத்திய தொழில் பாதுகாப்புப் படையில் தலைமைக் காவலராக பணியில் சேர்ந்தார்.

இடது கால் துண்டிக்கப்பட்டு மருத்துவ மனையில் இருந்தபோது எவரெஸ்ட் மலையில் ஏறவேண்டும் என விரும்பினார். அவ்வாறே 2013-ம் ஆண்டு மே மாதம் 21-ம் தேதி எவரெஸ்ட் மலையேறி உச்சியை எட்டினார். எவரெஸ்ட் மலை மட்டுமல்லாது உலகிலுள்ள மற்ற உயர்ந்த மலைகளிலும் ஏறவேண்டும் என்று அருணிமா ஆசைப்பட்டார்.

ஆதலால், ஆப்பிரிக்காவின் கிளிமஞ்சாரோ மலை, ஐரோப்பாவின் எல்பராஸ், ஆஸ்திரேலியாவின் கொங்கியங்கோ ஆகிய மலைகளில் ஏறினார். மேலும் மெக்கின்லே, வில்சன் மாசிப், அக்கோன்காகுவா என்னும் மலைகளில் ஏறி உலக சாதனை படைக்க விரும்புகின்றார் அருணிமா.

2015-ம் ஆண்டில் இவருக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பட்டது. இவருடைய தன் வரலாற்று நூல் 2014 டிசம்பர் மாதம் இந்திய தலைமை அமைச்சரால் வெளியிடப்பட்டது. உடல் குறைபாடு கொண்ட சிறுவர் சிறுமியர்களுக்கு விளையாட்டில் பயிற்சி அளிக்கும் நோக்கில் சந்திரசேகர் ஆசாத் விக்லாங்கேல் அகாதமி என்னும் ஓர் அமைப்பை நிறுவியுள்ளார்.



## எச். போனிஃபாஸ் பிரபு

நான்கு வயதில் இவரது வாழ்க்கை மாறிபோனது. வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியில் என்றே ஆனது. ஆனால் அந்த இயலாமை அவரது குறிக்கோளை ஒருநாளும் இழக்கவிடவில்லை. அவரது மகத்தான கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு அவரை இன்று முன்னணி இரு சக்கர நாற்காலி டென்னிஸ் வீரராக மாற்றியுள்ளது. 1998-ம் அண்டு உலக சாம்பியன்ஷிப் பதக்கம் வென்றார். 2014-ம் ஆண்டு இந்திய அரசு பத்மஸ்ரீ விருதை இவருக்கு வழங்கி சிறப்பித்துள்ளது.

# Excel™ GROUP INSTITUTIONS

*Excellence in Professional Education*



Excel Welcome Block



Excel Engineering College



Excel College of Engg. & Tech.



Excel Polytechnic College



Excel Business School



Excel College of Architecture



Excel College of Education



Excel Playground View



Excel Boys & Girls Hostel



Excel Over View

NH - 47, Salem Main Road, Pallakapalayam, Sankari West Post, Komarapalayam Tk. - 637303, Namakkal Dt.,
Near Erode / Bhavani, Ph: +91 4288 227361 to 67, Cell: 98427 13789, 99655 33370
Email: exceladmission@gmail.com, Web: www.excelinstitutions.com

Communication Address: | Mr. D. Shylet Moni, Chief Editor | Visions Global Empowerment India, First Floor, 27, Wireless Road, Kurinji Nagar West, K.K. Nagar, Trichy - 620 021. Cell: 89400 51900